லை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

கங்கள்: பன்னிரண்டு

ங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 17 புதன்கிழமை (01.03.2006) தொலைபேசி 222 3378 ஒலி 72

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

## யாழ்.பல்கலைக்கழகம் மிக விரைவில் இயங்கும்

### கல்வி அமைச்சர் அறிவிப்பு

அரசு–புலிகள் ஜெனீவா இணக்கப்பாட்டின் பிரதிபலனாக யாழ்.பல்கலைக்கழகம் மீண்டும் திறக்கப்படும் அறிகுறி தோன்றியுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இரண்டு மாதங்களுக்கு மேலாக கல்விச் செயற்பாடின்றி இருக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தை சில தினங்களில் மீண்டும் திறப்பதற்கான ஒழுங்குள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடந்த சில மாதங்களாக நிலவிய பதற்ற நிலைமை காரணமாக யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் தங்களது கல்வியை தொடரமுடியாமலிருப்பதாகக் கூறி பல்கலைக்கழக பகிஷ்கரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக கடந்த டிசம்பர் 25 ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகள் செயலிழந்தது. மாணவர்களின் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு–புலிகள் இணக்கப்பாடு ‘இணைத்தலைமை’ வரவேற்பு

(கொழும்பு)

சிக்கலுக்குள்ளாகி இருந்த யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்கு ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் இணக்கம் காணப்பட்டதை இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ மாநாட்டின் இணைத் தலைமைகள் வரவேற்றுள்ளன.

யப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன டோக்கியோ மாநாட்டின் இணைத்தலைமைகளில் அங்கம் வகிக்கின்றன. இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் கடந்த மாதம் 22,23 ஆம் திகதிகளில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பலனாக யுத்த நிறுத்த உடன்படிக்கையினை அமுல்படுத்துவதற்கு இணக்கப்பாடு காணப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது என இணைத் தலைமைகள் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளன.

யுத்த நிறுத்த உடன்படிக்கையினை மதித்து அதைக் கடைப்பிடிப்பதற்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் சட்ட விதிகளுக்கு அமைய செயற்படுவதற்கும் உறுதி வழங்கியுள்ளமையும் (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிக்கல்

# யாழ்.படைத்தளபதியுடன் நேற்று முக்கிய மாநாடு

### காங்கேசன்துறையில் நடந்தது

(நமது நிருபர்)

யாழ்.மாவட்டத்தில் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து படைத்தரப்புடன் ஆராயும் விசேடமாநாடு ஒன்று நேற்று பிற்பகல் 3மணியளவில் காங்கேசன் துறை படைத்தளத்தில் இடம்பெற்றுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## உடன்பாடுகளை அமுல்படுத்தாவிடின் எதிர்காலப் பேச்சுக்கள் பயனற்றது

### —சி.எழிலன்

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகளின் போது எட்டப்பட்ட உடன்பாடுகளை அரசு அமுல்படுத்தாவிடின் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள பேச்சுவார்த்தைகள் பயனற்றதென விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனத்திற்கு திருகோணமல்லயில் வைத்து எழிலன் வழங்கிய செவ்வியில்,

பாதுகாப்புப் படையினர் தவிர்ந்த ஏனையவர்கள் ஆயுதங்களை ஏந்தவோ ஆயுதங்களை கையாளவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள் என கடந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனீவாப் பேச்சுவார்த்தையை குழப்ப பெரும் சதித்திட்டம் தீட்டப்பட்டது

### கருணா குழுவிலிருந்து தப்பிவந்தவர் தகவல்

(மட்டக்களப்பு)

படையினரும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவும் ஜெனீவாவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையை சீர்குலைக்க மேற்கொண்ட சதி முயற்சி தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளது.

ஜெனீவாப் பேச்சுக்கள் நடைபெற்ற ஆரம்பமான பெப்ரவரி 22 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதிகளை இலக்குவைத்து தாக்குதல் நடத்துவதன் மூலம் ஜெனீவாப்பேச்சுக்களை குழப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக கருணா குழுவில் இருந்து விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ள இளைஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



கோரகல்லி மடுவைச்சேர்ந்த ஆறுமுகம் விக்னேஸ்வரன் (வயது 32) என்ற இளைஞர் கிளைமோர்த்தாக்குதல் நடத்துவதற்கு கொடுக்கப்பட்ட வெடிமருந்து நிரப்பப்பட்ட கலன் மற்றும் வெடிபொருட்களுடன் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்துள்ளார்.

இது தொடர்பாக ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு கொக்கட்டிச்சோலையில் உள்ள சோலையகத்தில் நடைபெற்றபோதே பிரஸ்தாப இளைஞர் மேற்படி சம்பவத்தை ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

சந்திவெளி, கோர (12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் சேரவந்த 20 சிறுவர்கள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைப்பு



தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து கொள்வதற்காக முன் வந்த 20 சிறுவர்கள் நேற்று பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்களை ஒப்படைக் (12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே
தரம்-5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...



# "இடம்பெயர்ந்த மக்களைப் பற்றியும் பேசவேண்டும்"

## விடுதலைப்புலிகளுக்கு ஜெனீவா அமைப்பு வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கைத் தீவிலே வாழ்ந்து வரும் சமாதானத்தை விரும்பும் சகல மக்களுக்கும் மன ஆறுதலை ஏற்படுத்தக் கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்காக நோர்வே அனுசரணையாளர்களுக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் ஜெனீவாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழர்களது சர்வதேசக் கூட்டமைப்பு என்ற அமைப்பு கடந்த திங்கட்கிழமை வெளியிட்ட ஓர் அறிக்கையில் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழக ஊழியர்கள் ஏழு பேரையும் உடனடியாக விடுவிக்க ஜனாதிபதி தனது அதிகாரம், செல்வாக்கு, நல்லெண்ணம் ஆகிய அனைத்தையும் ஆயுதக்குழுக்களின் மேல் பயன்படுத்த வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பத்திரிகைக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கத்தினதும் விடுதலைப் புலிகளினதும் சார்பில் இரண்டு நாள் சமாதானப் பேச்சுவார்த்தையின் முடிவில் கடந்த 23ஆம் திகதி வியாழக்கிழமை நோர்வே அனுசரணையாளர்களால் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையை தமிழர்களின் சர்வதேசக் கூட்டமைப்பு வரவேற்கிறது.

இப்பேச்சுவார்த்தை குறிப்பாக தமது பாரம்பரிய தாயகத்தில் அரச ஆயுதப்படையினராலும் அவர்களுடன் சேர்ந்தியங்கும் ஆயுதக் குழுக்களினாலும் சொல்லொணாத் துயரம், அவமரியாதை, பயமுறுத்தல் மத்தியில் வாழ்ந்த சமாதானத்தை விரும்பும் சகல மக்களுக்கும் பாரிய மன ஆறுதலை அளித்துள்ளது.

ஏப்ரல் மாதத்தில் அதே இடத்தில் இன்னுமொரு சுற்றுப் பேச்சுவார்த்தையை நடாத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளமை அனுசரணையாளருக்கும் இதர பகுதியினருக்கும் ஒரு வெற்றியாகும்.

அடுத்த சுற்றுப் பேச்சில் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடம்பெயர்ந்த மக்களை அவர்களுக்குச் சொந்தமான, சட்டபூர்வமான காணிகளில் குடியமர்த்துவதற்கான மனிதாபிமான நடவடிக்கைகள் பற்றியும் 30 ஆண்டுகளுக்கு மேலாக பாரம்பரிய மீன்பிடிப் பிரதேசத்தில் மீன்பிடிக்கும் உரிமையை பெற்றுக்கொடுப்பது பற்றியும் விடுதலைப்புலிகள் வற்புறுத்தவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறோம். (து)

# தகுதியின் அடிப்படையிலேயே அரசதுறையில் வேலை வாய்ப்பு

(கொழும்பு)

தேவையான தராதரங்களைப் பெற்று உரிய போட்டிப் பரீட்சைகளில் சித்தியடைபவர்களுக்கு மாத்திரமே இனிவரும் காலப்பகுதியில் அரசாங்கத்துறையில் தொழில்வாய்ப்புக்கள் வழங்கப்படுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுடன் நேரடித் தொலைக்காட்சி ஒளிபரப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசிய போதே ஜனாதிபதி இந்த தகவலை வெளியிட்டார்.

நாட்டில் பல்வேறு பிரதேசங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு விரைவில் அவற்றிற்கு தீர்வினைப்பெற்றுக்கொடுக்க வுள்ளதாகவும் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதேவேளை சுவீடன் செவிப்புல கட்புல நிறுவனமும் ஸ்ரீலங்கா ரெலிக்கோம் நிறுவனமும் இணைந்து புதிய தொழில்நுட்ப வசதிகளை அரசிற்கு வழங்கியுள்ளது. இப் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தியே ஜனாதிபதி பொதுமக்களுடனான நேரடி கலந்துரையாடல் நிகழ்வில்கலந்து கொண்டார். (க-39)

### ஜே.வி.பி. ஹெல உறுமய இணைந்து

# மஹிந்தவின் அமைச்சரவைக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் அரசாங்கம் ஏற்படுத்திக் கொண்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அமைச்சரவையின் பெயரை இடுவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

ஜே.வி.பி.மற்றும் ஜாதிக ஹெல உறுமயக்கட்சிகள் சார்பாக ஆஜரான சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையினை பரிசீலித்த பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த அனுமதியினை வழங்கியுள்ளது,

விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை இரத்துச் செய்யக்கோரி ஜே.வி.பி.மற்றும் ஜாதிகஹெல உறுமய கட்சி மனு ஒன்றினைத் தாக்கல் செய்திருந்தன.

இந்த மனுவில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இம்மனு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இம்மனு எதிர்வரும் மார்ச் மாதம் 29ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (க-4)

# அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை கோருகின்றனர் பொலிஸார்

(கொழும்பு)

நீதியான உள்ளூராட்சித் தேர்தலை உறுதிப்படுத்துவதற்கு சகல அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பும் பொலிஸார் கோரியுள்ளனர்.

சகல வேட்பாளர்களும் தற்போதைய தேர்தல் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும் என்று பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல் சட்டங்களுக்கு ஏதுவாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் பொலிஸ்மா அதிபர் சகல பொலிஸ் அதிகாரிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

சட்டங்களை மீறுபவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் எனவும் கடந்த வாரம் தேர்தல் வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை எனவும் தேர்தல் செயலகம் மேலும் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# இராசிபலன்

**01.03.2006**

**(மாசி 17, புதன் கிழமை)**

**துதியை பின்னிரவு 2.37மணிவரை**

**புரட்டாதி பிற்பகல் 1.19 மணிவரை**

**இராகுகாலம் 12.28-1.58மணிவரை**

**சுபநேரம் 4.58-6.28 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | பிறருக்கு உதவுதல், சோம்பல் நிலை, சிந்தனை மிகுதி, காரிய தாமதம். |
| இடபம் | ஆனந்தம், தனதானிய சேர்க்கை, நன்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம். |
| மிதுனம் | பிரபுத்தனம், நன்கொடை, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| கடகம் | உத்தியோக பக்கம், எதிர்பாராத செலவு, சரீரப்பிரயாசை, வீண்பயம். |
| சிங்கம் | சரீரபீடை, பொருள்விரையம், எடுத்த காரியம் தாமதமாகும், கலகம். |
| கன்னி | மனோதைரியம், சயனசுகம், கீர்த்தி, காரிய அனுகூலம். |
| துலாம் | சந்தோசமான நிகழ்வு, தடைப்பட்ட காரியம கைகூடும், தனவருவாய், உடல் நலம். |
| விருச்சிகம் | அஜீரண ரோகம், காரிய இடையூறு, பணக்குறைவு, குடும்பக்கவலை. |
| தனுசு | தன்னம்பிக்கைக் குறைவு, பெரியோர் உதவி, முயற்சி தாமதம், தனவிரயம். |
| மகரம் | மனோதைரியம், நற்கீர்த்தி, பொருள் சேர்க்கை, கூட்டுமுயற்சி. |
| கும்பம் | அதிக செலவு, மனோசங்கடம், போசன சுகக்குறைவு, உஷ்னநிலை. |
| மீனம் | வெகுமானம், சயனசுகம், மாதர் நட்பு, நல்ல முயற்சி. |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**

\- வளவன்

# இளைஞனின் சடலம் மீட்பு

பாண்டிருப்பிலுள்ள வயல் பகுதியிலிருந்து இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் அதிகாலை மீட்கப்பட்டுள்ளது. வெட்டுக்காயங்களுடன் காணப்பட்ட இந்த இளைஞனின் சடலம் சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த வடிவேல் பேரன்பராஜா (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் மணல்சேனை டிப்போவுக்கு அருகிலுள்ள குளத்துக்கு அருகாமையிலேயே இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (து)

# அரசியல் அலுவலகங்களை நடத்தத்தடை

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது எந்தவொரு கட்சிக்கும் அரசியல் அலுவலகங்களை நடத்துவதற்கு இடமளிக்க வேண்டாம் என்று பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோவிற்கு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க எழுத்து மூலம் தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபருக்கும் தேர்தல் ஆணையாளருக்கும் இடையே விரைவில் தேர்தல் செயலகத்தில் சந்திப்பு நடைபெறவுள்ளது. தேர்தல் அலுவலகம் தொடர்பாக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் ஆணையாளர் அறிவித்தல் விடுப்பார் என்று தேர்தல் செயலகத்தின் முக்கிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்திற்கமைய எந்தவொரு அரசியல் கட்சியும் கட்சி அலுவலகங்களை நடத்த முடியாது என்றும் வேட்பாளர்கள் தங்களின் வீடுகளைக் கட்சி அலுவலகங்களாகப் பயன்படுத்த முடியும் என்றும் அவர் கூறினார்.

தேர்தல் சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் இந்த ஒழுங்கு விதிகள் சரிவரக் கடைப்பிடிக்கப்படுவதில்லை இம்முறை அதனை உரியவகையில் கடைப்பிடிக்க தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார் என்றும் கூறப்படுகிறது. (க)

# நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த ஊடகங்களின் பங்களிப்பும் அவசியம்

நிரந்தர சமாதானத்தை யதார்த்த பூர்வமாக்குவதற்கு உள்ளூர் ஊடக நிறுவனங்கள் பெரும் பங்காற்ற வேண்டுமென்று இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜெனீவாப் பேச்சுக்கள் தொடர்பாக சில ஊடக நிறுவனங்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கைகள் அதிருப்தி அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே சுவிஸ் தூதுவர் இதனைத் தெரிவித்தார். யுத்த நிறுத்த கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றி பொறுப்புணர்ச்சியுடனும் தீர்க்கதரிசன நோக்குடனும் தகவல் வெளியிடும் பொறுப்பை ஊடகங்கள் கொண்டிருப்பதாக அவர் வலியுறுத்தினார். (க)

# இறைவனை நோக்கி பயணம் மேற்கொள்ளும் திருயாத்திரைக் காலமே தவக்காலமாகும்

*தவக்காலச் செய்தியில் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர்*

இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனை நோக்கிய உள்ளார்ந்த பயணத்தை மேற்கொள்ளும் திருயாத்திரைக்காலமே தவக்காலமாகும்.



இவ்வாறு இன்று விபூதிப் புதனுடன் ஆரம்பமாகின்ற தவக்காலத்தையொட்டி பரிசுத்த பாப்பரசர் 16 ஆம் பெனடிக்ற் வெளியிட்ட செய்திக்குறிப்பில்தெரிவித்துள்ளார்.

''திரண்டிருந்த மக்களை இயேசு கண்டபோது அவர்கள் மேல் பரிவு கொண்டார்.'' (மத்.9.36) என்ற மையக்கருத்தில் திருத்தந்தை தனது செய்தியை வரைந்திருக்கின்றார். அவர் தமது செய்தியில் மேலும் தெரிவித்ததாவது.

'இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனை நோக்கிய உள்ளார்ந்த பயணத்தை மேற்கொள்ளும் திருயாத்திரைக் காலமே தவக்காலமாகும். இந்த பயணத்தின் போது எமது வெறுமையான பாலைவன அனுபவங்களில் இறைவன் தாமும் எம்முடன் பயணித்து எம்மை ஈஸ்ரர் மகிழ்வை நோக்கி அழைத்துச் செல்கின்றார். திருப்பாடல் ஆசிரியர் கூறுவதுபோன்று இருள் சூழ்ந்த பள்ளத்தாக்கில் நாம் நடக்க (தி.பா. 23:4) நேருகின்ற வேளையில் நாம் நம்பிக்கை இழக்காதிருக்க எம்மை பாதுகாத்து திடப்படுத்தும் இறைவனாக அவர் எம்மோடு பயணிக்கின்றார்.

இன்று எம்மத்தியில் ஆறுதலுக்காக, அன்புக்காக, சமாதானத்துக்காக ஏங்கும் ஒவ்வொருவரின் குரலையும் ஆண்டவர் கேட்டுக்கொண்டேயிருக்கிறார். இருள் வெற்றிபெற ஒருபோதும் அனுமதிக்காத இறைவனின் இரக்கத்தில் நம்பிக்கை கொண்டு எமது தவக்காலத் திருப்பயணத்தை தொடருவோம்'' இவ்வாறு திருத்தந்தை தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். (க-4)

# சுனாமியால் பாதிப்புற்றோருக்கு உதவ "சுனாமி புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டம்"

சுனாமி புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் புதிய நிறுவனம்ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

சுனாமியால் பாதிப்புற்றவருக்கு புனர்வாழ்வு அளிப்பதற்காக மந்தகதியில் ஒழுங்கற்ற முறையில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் சீர்திருத்துவதற்காகவும் ஒருங்கிணைப்பை வழங்குவதற்காகவுமே இந்த நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் சுனாமிப் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக செயற்படும் சகல நிறுவனங்களையும் இணைத்து, துரித திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படும்.

இதேவேளை ஏற்கனவே முன்னோடித் திட்டமாக, பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (க-7)

# பொதுச் சேவை ஊழியர்களின் இடமாற்றம் பதவி உயர்வுகள் இரத்து

(கொழும்பு)

உள்ளூராட்சி சபை தேர்தலையொட்டி பொதுச் சேவை ஊழியர்களின் இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், வெளிநாட்டுப் பயணங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

பொது நிர்வாக அமைச்சின் பேச்சாளர் இது குறித்து கூறுகையில்,

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பொதுச்சேவை ஊழியர்களுக்கான சுற்றறிக்கை ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. நீதியும் நியாயமானதுமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணையாளர் முடிவு செய்துள்ளார் என்றார்.

இருப்பினும் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அரசியல் காரணங்களுக்காக நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்று கல்வித்துறை தொழிற்சங்கங்கள் குற்றம் சாட்டியுள்ளன.

இலங்கை ஆசியர்கள் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டார்லின் இது தொடர்பில் கூறுகையில்,

மேற்கு மாகாணத்திலும் கூட எதுவித முறையான நடைமுறைகளுமின்றி பல ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் என்றும் இத்தகைய இடமாற்றங்களை இரத்துச் செய்ய வேண்டும் என்றும் மனித உரிமைகள் ஆணையத்திற்கு வேண்டுகோள் விடுப்பதாகக் கூறினார்.

இதனிடையே இலங்கை ஆசிரியர்கள் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜய சிங்கவும் தமது சங்கத்தின் உறுப்பினர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (து)

# 'ஈழத்து சமரச ஒப்பந்தங்களை சீர்குலைப்பது யார்' நூல் வெளியீடு

(சென்னை)

சென்னையில் ஈழத்து சமரச ஒப்பந்தங்களை சீர்குலைப்பது என்ற நூல் எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது.

சென்னை இராயப்பேட்டையில் தந்தை பெரியார் திராவிடர் கழகம் சார்பில் ஈழத் தமிழர் பிரச்சினையில் அமெரிக்காவின் மிரட்டலைக் கண்டித்து நடத்தப்படும் பொதுக் கூட்டத்தில் இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் எழுதியிருக்கும் இந்நூலை வழக்கறிஞர் செ.துரைச்சாமி வெளியிட, தமிழ் முழக்கம் பதிப்பக நிறுவனர் சாகுல் ஹமீட் பெற்றுக்கொள்வார்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத் தலைவர் கொளத்தூர் தா.செ. மணி, துணைத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஆனூர் ஜெகதீசன், திரைப்பட இயக்குநர் சீமான், தமிழர் இயக்கத் தலைவர் தியாகு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டரணி துணைச் செயலளர் 'தடா ஓ.சுந்தரம்' உள்ளிட்டோர் இப்பொதுக் கூட்டத்தில் உரையாற்றவுள்ளனர் (து)

# வெள்ள நிவாரணக் கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை

## பாதிக்கப்பட்ட மக்கள் கவலை

(காரைநகர்)

காரைநகர் பிரதேசத்தில் கடந்த வருடம் மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களிற்கு இன்றுவரை வெள்ள நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது, கடந்த வருட இறுதியில் தொடர் அடைமழை காரணமாக ஊரி, தோப்புக்காடு, பிட்டியெல்லை, வென்னனடைப்பு போன்ற கிராம மக்கள் இடம்பெயர்ந்து பொது இடங்களில் தங்கியிருந்தனர்.

இதன்போது ஏற்பட்ட இழப்புக்களிற்காக ஒரு தொகை நிதிக் கொடுப்பனவு வழங்கப்படும் என உறுதியளிக்கப்பட்டதாகவும் அதற்காக வங்கிக் கணக்கிலக்கங்கள் காரைநகர் உதவி அரச அதிபர் பணிமனையால் பெறப்பட்டு நீண்ட காலமாகியும் இதுவரை அக் கொடுப்பனவுகள் எவையும் வழங்கப்படாதிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நஷ்ட ஈட்டுக் கொடுப்பனவை துரிதமாக பெற்றுத்தர நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட தரப்பினரைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (த-246)

# ஐ.ம.சு.மு வேட்பாளர்களை ஜனாதிபதி இன்று சந்திப்பார்

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று சந்தித்துப்பேசவுள்ளார்.

இச்சந்திப்பில் தேர்தலுக்கு முன்னதாக பிரசார நடவடிக்கைகளை எவ்வாறு திட்டமிட்டு முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றி வேட்பாளர்களுக்கு விளக்கமளிக்கப்படுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆளும் கூட்டமைப்பில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் பங்கேற்க இருக்கிறார்கள்.

இதேவேளை கூட்டமைப்பின் பிரசார நடவடிக்கைகளும் இன்று நடைபெறும் என்றும் அதன் பொதுச் செயலாளர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். (க-9)



அச்சுவேலி புனித தெரேசா மகவீர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி) கே.குமாரசாமி, சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி இ.சிவஞானசுந்தரம், கௌரவ விருந்தினர் அச்சுவேலி பங்குத் தந்தை பி.ஜோதிநாதன் ஆகியோர் கல்லூரி அதிபர் சகிதம் அழைத்து வரப்படுவதைப் படத்தில் காணலாம். (படம் : நல்லூர் நிருபர்)

## 15 வீடுகள் கையளிப்பு

சுனாமியால் வீழுந்த மக்களுக்காக கே.பி.எம்.ஜி. நிறுவனத்தின் அனுசரணையுடன் அமைக்கப்படவுள்ள 100 வீடுகள் திட்டத்தின் முதற்கட்டமாக புனிதநகர் கற்கோவளத்தில் அமைக்கப்பட்ட 15 வீடுகள் கடந்த திங்கட்கிழமை 15 பயனாளிகளுக்கு யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜனியால் வைபவரீதியாகக் கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், மேற்படி நிறுவனத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட பங்காளர் ராஜன் ஆசீர்வாதம் ஆகியவர்கள் கலந்துகொண்டனர்.

இந் நிகழ்வையடுத்து மேலும் இரண்டு வீடுகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. (து-132,133)

## விவசாயிகள் விசனம்

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் கட்டாக்காலி கால்நடைகளினால் விவசாயிகள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர்.

தற்போது அறுவடைக்காலம் ஆதலினால் விவசாயிகள் ஆர்வத்துடன் அறுவடையில் ஈடுபட்டுள்ள போதும் கால்நடைவளர்ப்போரின் கவலையீனத்தாலும் காரைநகர் பிரதேச விவசாய சம்மேளனங்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளினாலும் அறுவடைப் பயிரினை கால் நடைகள் அழித்து வருகின்றன.

இக் கால்நடைகளை இன்னும் கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படாதையிட்டு விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (த-246)

# நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க நூற்றாண்டு மலர் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு குமாரசுவாமி மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் ஓய்வு பெற்ற நில அளவை நர்யகம் தா.சோமசேகரம் பிரதம விருந்தினராகவும், யாழ். இந்துக் கல்லூரி நம்பிக்கை நிதியத்தலைவர் வி.கயிலாச பிள்ளை, யாழ்பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் தலைவர் ச.ராகவன், கல்லூரியின் முன்னாள் அதிபர் சுபர் இ.மகேந்திரன், பழைய மாணவர் சங்கத்தின் ஜேர்மன் கிளைத் தலைவர் ஆர்.சி.இராமநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள்.

மலர் வெளியீட்டு உரையை பேராசிரியர் கா.குகபாலன் (மலராசிரியர்) நிகழ்த்துவார். (து)

## வங்கி வேலைநேரம் நீடிப்பு

தற்பொழுது குடாநாட்டில் தற்காலிகமாக தோன்றியுள்ள சாதகமான சிவில் நிர்வாக நிலைமையினைக் கருத்தில் கொண்டு இதுவரை பிற்பகல் 2.00 வரை மட்டுப்படுத்தப்படிருந்த வாடிக்கையாளர் கொடுக்கல் வாங்கல் நேரம் இன்றிலிருந்து மீண்டும் பிற்பகல் 3.00 மணி வரை அவ்வக்கிளைகளில் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ். இலங்கை வங்கி மேற்றரக் கிளை பிரதம முகாமையாளர் என்.சிவரத்தினம் தெரிவித்துள்ளார். (க-132,133)

# ஓய்வு பெறக் காத்திருக்கும் தேர்தல் ஆணையாளர்!

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழு நியமனம் செய்யப்படுவதைத் தான் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு நியமிக்கப்படுமானால், ஓய்வு பெறக் காத்திருக்கும் தனக்கு அது மகிழ்ச்சியான செய்தியெனவும் அவர் கூறினார்.

ஆணைக்குழு நியமிக்கப்படுவது சம்பந்தமாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவினால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துக்கான பதில் கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல் அமைப்புச் சட்டத்துக்கமைவாக ஜனாதிபதியினாலேயே இந்த ஆணைக்குழு நியமிக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டும் தேர்தல் ஆணையளர், ஆணைக்குழுவைத் துரிதமாக நியமிக்குமாறு தான் பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடுத்திருப்பிதாகவும் குறிப்பிட்டார். (க-7)

# தமிழ்ச்செல்வனின் கருத்துக்குப் பதில் கூற அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா மறுப்பு

(கொழும்பு)

'நான் சமாதான செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பாளராக செயற்படுபவன். இதன் அடிப்படையில் ஒரு சிலரின் கூற்றுக்களுக்கு பதிலோ கருத்தோ கூறமுடியாத நிலைமையில் உள்ளேன்' என்று ஜெனீவா பேச்சுவார்த்தையில் அரச குழுவுக்குத் தலைமை வகித்த அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

சமாதான செயற்பாடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

'ஜெனீவாவில் ஒன்றை தெரிவித்த அரசு கொழும்பில் வேறொன்றைத் தெரிவித்துள்ளது' என்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் குற்றஞ்சாட்டியுள்ளமை தொடர்பாக கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். தமிழ்ச்செல்வனின் கூற்று தொடர்பாக கருத்துக் கூற அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா திட்டவட்டமாக மறுத்துவிட்டார். (து)

# துறைமுக சபைத் தலைவரின் மாதாந்த தொலைபேசிக் கட்டணம் 2 இலட்சம் ரூபா?

இலங்கைத் துறைமுக சபைத் தலைவரின் மாதாந்த தொலைபேசிக் கட்டணமாக 2 இலட்சம் ரூபா செலவிடப்படுவதாக அனைத்துத் துறைமுக ஊழியர்களின் தொழிற்சங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

இக் குற்றச்சாட்டுத் தொடர்பாக கருத்துத் தெரிவித்த துறைமுக சபையின் தலைவர் விஜயசுந்தர, இத்தகைய குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் கிணற்றுத் தவளைகளாக இருப்பவர்கள் என்றார்.

மேலும் சர்வதேச துறைமுகத்தின் தலைவராக உள்ளதால், தான் கப்பல் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் நிர்வாகத்தினருடன் நெடுநேரம் பேச வேண்டியுள்ளது எனவும் குறிப்பிட்டார்.

துறைமுகங்களின் இலாபம் மட்டும் 6 பில்லியன் ரூபாவாகும் இதில் தனது தொலைபேசி கட்டணத் தொகை 2 இலட்சம் ரூபா என்பதில் ஒரு பாதிப்பும் இல்லை என்றும் அவர் தெரிவித்தார். (க)

# க.பொ.த (சா/த) முடிவு மார்ச்சில் வெளியாகும்

கல்விப் பொதுத் தரா்தரப் பத்திர சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் எதிர்வரும் மார்ச் மாதம் 20ஆம் திகதியள்வில் வெளியிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு 5 இலட்சத்து 26 ஆயிரத்து 629 பரீட்சார்த்திகள் தோற்றியுள்ளனர் இவர்களில் 3 இலட்சத்து 76 ஆயிரத்து 702 பாடசாலைப் பரீட்சார்த்திகளும் 1 இலட்சத்து 47 ஆயிரத்து 927 தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் அடங்குவர்.

இதேவேளை இவ்வருடத்துக்கான க.பொ.த (உ/த) பரீட்சை ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (து)

## மருத்துவசேவை

(நல்லூர்)

எதிர்வரும் 11, 12ஆம் திகதிகளில் ஆரம்பமாகும் கச்சதீவுப் பெருநாள் உற்சவத்தில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க நெடுந்தீவுப் பிரிவின் தொண்டர்கள் மருத்துவ சேவையை வழங்கவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை நெடுந்தீவுப் பிரிவின் தலைவர் ஏ.அருந்தவசீலன் மேற்கொண்டுள்ளார். (க-134)

## இன்று ஒரு தகவல்

### அகிம்சையின் ஆற்றல்

ஒரு தேசத்து ராஜாவுக்கு புத்திரபாக்கியம் இல்லை வாரிசு இல்லாததினால் வழக்கப்படி பட்டத்து யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து வீதிவழியாக அழைத்துக் கொண்டுவந்தார்கள். அந்தப் பட்டத்து யானை யார் கழுத் தில் மாலையைப் போடுகிறதோ அவர்தான் ராஜா. அவருக்குத்தான் முடி சூட்ட வேண்டும்.

யானை மாலையுடன் வந்து கொண்டிருந்தது. வழியில் ஒரு துறவி வந்து கொண்டிருந்தார். எல்லா வற்றையும் துறந்தவர் யானைக்கு என்ன தோன்றி யதோ தெரியவில்லை அவரது கழுத்தில் மாலை யைப் போட்டு விட்டது. அவ்வள வுதான் துறவியை சகல அரசமரியாதையுடன் அரண் மனைக்கு அழைத்துக்கொண்டு போனார்கள். எதற்கு இப்படியெல்லாம் செய்கின்றனர் என்று அவருக்கு ஒன்றும் புரியவில்லை. என்னை ஏன் இப்படி இங்கே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறீர்கள் ? என்று கேட்டார்.

''சுவாமி! இப்போது தாங்கள்தான் இந்த நாட்டுக்கு மன்னர். பட்டத்து யானை உங்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. இது இறைவனின் தீர்ப்பு என்றார் அமைச்சர். எனக்கு இந்த அரசபதவி தேவையில்லை நான் துறவி என்றார். அவர் சுவாமி... இது இறைவனின் திருவுள்ளம் தயவு செய்து குடிமக் களின் நலன் கருதியாவது இந்த அரச பதவியை நீங்கள் ஏற்றுக கொள்ளவேண்டும் என்றார்கள். வேறு வழியில்லாமல் துறவி சம்மதித்தார் அரச பதவியை ஏற்றுக் கொண்டார்.

தாமரை இலைத்தண்ணீர் மாதிரி இவர் எதிலும் பற்றுதல்கொள்லாமல் ராஜாங்கவேலைகளை கவனித்துக் கொண்டே வந்தார்.இப்படி ஒரு ராஜா இருந்தால்... பக்கத்து நாட்டு அரசன் சும்மா இருப்பானா? உடனே சண்டையிட படை யெடுத்துக்கொண்டுவந்து விட்டான். அரண்மனையில் இருந்த துறவி மன்னனிடம் அமைச்சர்கள் ஓடிவந்து விடயத்தைக் கூறினார்கள். அந்நிய தேசத்து அரசன் நமது நாட்டின் மீது படையெடுத்து வந்திருக்கிறான் என்றார்கள். அந்த மன்னன் நமது நாட்டின் மீது ஏன் போர் தொடுத்தான். நாம் அவனுக்கு என்ன கெடுதல் செய்தோம்? என்று கேட்டார் துறவி.

அரசே அவன் நம் மீது போர் தொடுப்பதற்கு எந்த வித காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை! அவனுடைய படைகள்நமது நாட்டு எல்லைக்குள்புகுந்து விட்டது. தயவு செய்து அவர்களை எதிர்த்துப் போரிட எங்களுக்கு உத்தரவிடுங்கள்'' என்றனர். வேண்டாம் அவர்களை எதிர்க்க வேண்டாம் யாராக இருந்தாலும் சண்டையிடுவது தகாத செயல் அமை தியாக இருங்கள் அது போதும் என்றார் துறவி. என்ன இது இப்படிச் சொல்கிறாரே என்று நினைத்தார்கள். இருந்தா லும் என்ன செய்ய முடியும் என்று பேசாமல் இருந்துவிட்டார்கள்.

படையெடுத்துக்கொண்டு வந்த மன்னன் பார்த்தான் என்ன இது... யாருமே எதிர்த்து சண்டையிடவரவில்லையே என்று நினைத்தான் பேசாமல் கிடுகிடுவென்று அரண்மனைக்குள் வந்து துறவியைப்பார்த்தான். அரசே! உங்களுடன் சண்யையிட வந்திருக்கிறேன் என்ன சொல்கிறீர்கள் என்றான். என்னுடன் சண்டையிட்டு உனக்கு என்ன ஆகப்போகிறது? எதற்காக என்னுடன் சண்டை பிடிக்கவேண்டுமென் கிறாய்?'' என்றார் அந்தத் துறவி. ''நான் உங்கள் தேசத்தைப்பிடிக்கப் போகிறேன்'' என்றான் அவன்.

இதைக் கேட்டதும் துறவி கடகடவென்று சிரிக்க ஆரம் பித்து விட்டார். இந்த தேசம் உனக்கு வேண்டும் அவ்வளவு தானே இதற்காக நீ ஏன் என்னுடன் போராடவேண்டும்.இதோ இப்போது முதல் நீ தான் இந்த தேசத்திற்கும் மன்னன நானோ... அன்றும் துறவி... இன்றும் துறவி... வா...வந்து இந்த சிம் மாசனத்தில் உட்கார்'' என்றார். சொல்லிவிட்டு அவர் எழுந்து விலகி வந்தார். சண்டையிடவந்த மன்னனுக்கு வெட்கமாகி விட்டது. துறவியின் காலில் பொத்தென்று விழுந்தான்.

''ஐயா நான் தவறு செய்து விட்டேன். உங்கள் பெருந்தன்மை தெரியாமல் நான் போர் செய்யவந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடுங்கள்' என்றான். அது மட்டுமல்ல அரசே! என்னுடைய ராஜ்யத்தையும் உங்கள் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன். இரு நாடுகளுக்கும் இனி மேல் நீங்கள் தான் மன்னர் நான் உங்கள் அடிமை... என்னை ஆசீர்வதி யுங்கள் என்றான்.

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமின்றி அந்தத்துறவி இரு நாடுகளுக்கும் மன்னர் ஆனார்.இதுதான் அகிம்சையின் வலிமை தியாகத்தின் பெருமை இதைப்புரிந்து கொள்ளா மல் போனதால்தான் இன்று உலகத்தில் குழப்பம் ராஜாக்களில் வேறு சில ரகமும் உண்டு.

ஒரு ராஜா அரண்மனையில் உட்கார்ந்திருந்தார். அமைச் சரும் தளபதியும்வேகமாக ஓடிவந்தார்கள் அரசே அந் நியதேசத்து மன்னன் நம்முடன் சண்டையிட படையெடுத்து வருகிறான் என்ன செய்யலாம் என்றனர். உடனே என்னை பத்திரமான இடத்திற்குக் கொண்டுபோங்கள் என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# சிங்களவனுடன் சேரும் எவனும் தமிழனுக்கு எதிரானவனே!

## இது தென்தமிழீழக் குழந்தைக்கும்தெரியும் என்கிறார் இளந்திரையன்

(கொழும்பு)

சிங்களவனுடன் சேரும் எவனும் நிச்சயமாக தமிழனுக்கு எதிரானவன் என்பது தென் தமிழீழக் குழந்தைக்கும் தெரியும் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த இளந்திரயன் தெரிவித்தார்.

தென் தமிழீழத்தின் தற்போதைய நிலவரம்



குறித்து சுவிஸ்வாழ் ஈழத்தமிழர்கள் மத்தியில் இளந்திரையன் ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், வடக்கு-கிழக்கு இணைந்த எமது தாயகக் கோட்பாடானது வரலாற்று ரீதியாக, உணர்வு ரீதியாக அசைக்க முடியாத ஒரு அம்சமாக அமைந்து விட்டது என்பது உலகில் உள்ள அனைவருக்கும் தெரியும்.

காலணித்துவ ஆட்சியாளர்களின் படையெடுப்புக்கு முன்பு தனித்தனி தேசங்களாக இருந்தோம். காலணித்துவ ஆட்சியில் இந்தத் தேசங்கள் இணைக்கப்பட்டன. வெள்ளையர்கள் வெளியேறிய போது நடந்த அதிகார மாற்றத்தின் போது அதிகாரம் சிங்களவர்களுக்குச் சென்றது.

தமிழர்களை எப்படி அடக்கி ஒடுக்கி வைப்பது என்று திட்டமிட்டிருந்த சிங்களவர்கள் இந்த அதிகாரப் பரிமாற்றலுக்குப் பின்னர் முதலில் பகுதீகரீதியாக தமிழர் தாயகத்தைப் பிரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தார்கள் தமிழர் தாயகத்தின் பிரதேசங்களுக்கான பாதைகள் அனைத்தையும் சிங்களவர் தமது பிரதேசங்கள் ஊடே செல்லும் வழியானதாகவே அமைத்தார்கள்.

யாழ்ப்பாணம் தொடங்கி திருகோணமலை வரையில் எமது தாயகத்தில் இருந்த கடலோரச்சாலைவழி இல்லாதொழிக்கப்பட்டு சிங்களப் பிரதேசங்களுடகவே வழி அமைக்கப்பட்டது.

நம் தமிழீழம் அமைக்கப்பட்டவுடன் முதல் பணியாக இந்தக் கடலோரச் சாலை வழி அமைக்கப் படும் என்பது உறுதி. அடுத்ததாக தமிழர் தாயகச் சிந்தனையை கருத்து ரீதியாக தகர்ப்பது என்கிற வகையில் நிர்வாக ரீதியாக கொழும்பையே சார்ந்திருக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்கினார்கள். யாழ்ப்பாணத்தில் இருந்தாலும் திருகோணமலையில் இருந்தாலும் அனைத்துக்குமே கொழும்புக்குச் செல்ல வேண்டிய கருத்து ரீதியான செயற் பாட்டை ஏற்படுத்தினார்கள். அதேபோல் சிறுபான்மையினருக்குள்ளும் பிரிவினைக் கருத்துக்களை உருவாக்கினார்கள்.

ஆனால் ஒட்டுமொத்த தாயகக் கோட் பாட்டுக்கான கனவு கனவுக்காக பொருள் வடிவிலும் மனித உழைப்பின் வடிவிலும் தியாகத்தின் வடிவிலுமான தமிழ் மக்களின் கூட்டு முதலீடு என்பன பெருந்தொகையாக இருந்ததால் சிங்களவர்களால் எதுவும் பெரிதாக செய்ய முடியவில்லை.

இதேவேளை, தமிழனுக்கு எதிராகச் செயற்படும் எந்தவொரு துரோகியும் அந்த தியாக நெருப்பை எதிர்கொள்ள முடியாது அந்த அள வுக்கு மாவீரர்களின் தியாகத்திற்கும், போராளிகள் மற்றும் மக்களின் ஒன்றிணைந்த எண்ணத்துக்குமே வெற்றி கிடைத்தது.

நம் தலைவருடைய நுட்பமான திட்டமிடலினாலே அணைத்துமக்களினது ஒட்டுமொத்த நல்லெண்ணத்தினாலும் மாவீரர்களினது தியாக நெருப்பின் வலிமையினாலும் துரோகிகளின் இந்த திட்டமிடல் தகர்த்தப்பட்டது. என்பது தான் உண்மை.

இந்தியாவில் இருந்து தமிழ் மக்களை ஏமாற்றி அழைத்துவர வெள்ளையர்களால் கண்காணிகள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அப்படியான சில கைக் கூலிகள் எல்லா இடங்களிலும் தற்போதும் இருக்கின்றனர். மக்களினது உண்மையான நிலைப்பாட்டை அவர்கள் தெரிவிப்பதில்லை. தென் தமிழீழத்தின் மக்கள் தருணம் வரும்போது தான் தங்கள் கருத்தை தெரிவிப்பார்கள். கருத்துபொதுப்பகிர்வுகளோ கருத்துச் சமராடல்களோ அங்கு நடப்பதில்லை. ஓர் இருவர் சொல்கிற கருத்துக்கள் ஒட்டு மொத்த மக்களின் கருத்தாக மாறிவிடாது.

தென்தமிழீழ மக்கள் மிகவும் தெளிவாக உறுதியாக இருக்கிறார்கள். கடந்த கரும்புலிகள் நாளின் போது 'தலைவரே! உடனே யுத்தத்தை தொடங்குங்கள்' என்று மக்கள் மனு கொடுத்தனர். ஏனெனில் சிங்களவர்களைப்பற்றிய தெளிவான பார்வை அந்த மக்களுக்கு இருக்கிறது. சிங்களவர்களால் அதிகம் கொடுமைப்படுத்தப்பட்டவர்கள் அங்கே இருக்கிறார்கள். சிங்களப்படைகளால் வேதனைப் படுத்தப் பட்டவர்கள் , வதைக்கப்பட்டவர்கள், பொருள் இழப்புக்களைச் சந்தித்தவர்கள் , உயிரிழப்புக்களைச் சந்தித்தவர்கள் , வாழ்வை இழந்தவர்கள் அங்கு இருக்கின்றனர்.

சிங்களவனுடன் சேரும் எவனும் நிச்சயமாக தமிழனுக்கு எதிரானவன் என்பது தென் தமிழீழக் குழந்தைக்கும் தெரியும்.

இதே சமயம் வவுனியா எழுச்சி மாநாட்டிற்கு வலுசேர்க்கிற மாநாடு மட்டக்களப்பு இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. எங்கள் தலைவர் பயின்ற, விளையாடிய மைதானத்திலேயே நடைபெற்றது.மாநாடு நடைபெறும் தினத்தன்று காலையில் அந்த வளாகத்தில் குண்டு வீசப்பட்டது. நிகழ்வுகளில் பங்கேற்க இருந்த முக்கிய பிரமுகர்களுக்கு கொலை அச்சுறுத்தல்கள் தொலை பேசியூடாக விடுக்கப்பட்டன. அத்துடன் பேருந்தில் மக்கள் வந்து இறங்கிய போதும் குண்டு வீசப் பட்டது. ஆனால் ஒரு மக்கள் கூட நகர்ந்து செல்லவில்லை. நெஞ்சை நிமிர்த்தி மைதானத்திலே திரண்டு உரத்த முழக்கமிட்டார்கள்.

இராணுவம் சுற்றி வளைத்து நின்றிருந்த போதும் அந்த மக்கள் 'எங்கள் தலைவன் பிரபாகரனே! எங்கள் தேசம் தமிழீழமே! துரோகி களை ஒலிப்போம்! ஆக்கிரமிப்புப்படையே வெளியேறு!' என்று உறுதி மொழி எடுத்துக்கொண்டனர்.

அச்சுறுத்தல்கள் , மிரட்டல்கள் , படுகொலைகள் ஒரு தனிமனிதனின் வாழ்க்கையில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் கூட மக்கள் தங்கள் உணர்வுகளை ஒன்று திரண்டு அன்றும் வெளிப்படுத்தினார்கள்... இன்றும் வெளிப்படுத்துகிறார்கள் ஆகையால் நாம் அதைப் பற்றி கவலை கொள்ளவேண்டியது இல்லை என்றார் இளந்திரயன். (க)

# ஒற்றையாட்சியை பாதுகாக்கும் நிலையிலிருந்து அரசு விலகிச் செல்கிறது -ஜே. வி. பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஒற்றையாட்சியை பாதுகாக்கும் நிலைப்பாட்டிலிருந்து அரசாங்கம் விலகிச்செல்வதாக ஜே. வி.பி குற்றம் சாட்டியுள்ளது. கதிர்காமத்தில் நேற்று முன்



தினம் காலை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ மேற்கண்டவாறு குற்றம் சாட்டினார் அவர் அங்கு மேலும் கூறுகையில்,

கடந்த ஜனாதிபதித்தேர்தலில் நாட்டைப்பிரிப்பதற்கு எதிராக மக்கள் வழங்கிய ஆணையை பாதுகாப்பதற்கும் நாட்டையும் நாட்டின் நிர்வாகத்தையும் நேரான வழியில் கொண்டு செல்வதற்கும் ஜே. வி.பி பலமடையவேண்டும்.இதனைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே. வி.பியை வெற்றியடையச்செய்வதற்கு அனைவரும் முன்வரவேண்டும்.

ஜே.வி.பியின் வெற்றி நாட்டின் வெற்றி என்பதை எவரும் மறந்து விடக்கூடாது. பிரிவினைவாத அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைத்து தேசத்தை பாதுகாப்பதற்காகவே கடந்த ஜனாதிபதித்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றியடையச் செய்வதற்கு ஜே.வி.பி பாடுபட்டது. இதன் பயனாக ஜனாதிபதி என்னும் மக்கள் ஆணை மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிட்டியது. ஒற்றையாட்சியை பாதுகாத்து போர் நிறுத்த உடன்படிக்கை என்னும் ரீதியில் நாட்டை பறிகொடுக்க முனைந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாறாக செயற்பட்டு நாட்டை பாதுகாக்கவே ஜனாதிபதி மஹிந்த ரஜபக்ஷவுக்கு மக்கள் தனது ஆதரவினை வழங்கினார்கள். ஆனால் தமக்குக் கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையை அர்த்த புஷ்டியுடன் முன்னெடுக்க அரசாங்கம் தவறி வருகின்றது. அது மட்டு மன்றி தமது நிலைப்பாட்டில் இருந்தும் அரசாங்கம் விலகும் நிலைதென்படுகின்றது. எனவே நாட்டை சரி யானவழியில் கொண்டுசெல்லவும் மக்கள் ஆணைப் படி நாட்டின் நிர்வாகத்தை முன்னெடுக்கவும் அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க ஜே. வி. பி. பலமடையவேண்டும் . இதனால் கிராமங்களின் அதிகாரங்கள் ஜே.வி.பியினருக்கு வழங்கி நாட்டை நேரான வழியில் முன்கொண்டு செல்ல வைக்கும் சக்தியாக மாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்றார்.

இக்கூட்டத்திற்கு ஜே.வி.பியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் கருணாதிலக ஹேரத், தன மல்வில பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பி. சிறிசேன, கதிர்காமம் பிரதேச சபையின் தலைமை வேட் பாளர் எம். எம்.சுனில் உட்பட கட்சியின் பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (து)

# காயத்திற்கு மருந்திடுவது யார்?


‘யாரிடம் போய்ச் சொல்வேன்’
(அன்றூ பிளின்ரோவ்)

இந்தியாவில் இருக்கும் இங்கிலாந்து கிரிக்கெற் அணியினர் பல சிக்கல்கள் மற்றும் உடல்நலக் குறைவால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

இங்கிலாந்து அணியின் தலைவர் மைக்கல் வோகன், தனது முழங்காவில் ஏற்பட்ட காயத்தால் நாடு திரும்புகின்றார். இதன் காரணமாக அவர் இந்தத் தொடர் முழுவதிலும் பங்கேற்பது சந்தேகந்தான்.

சில நாட்களுக்கு முன்பதாக இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர்களில் ஒருவரும் அணியின் உபதலைவருமான மார்க்கஸ் ரெஸ்கோதிக் குடும்ப சூழ்நிலை காரணமாக ஏற்கனவே நாடு திரும்பி விட்டார்.

அணியில் முக்கியமான இருவர் இல்லாதது இங்கிலாந்துக்கு பெரும் இழப்புத் தான் என கிரிக்கெற் வல்லுனர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

மைக்கல் வோகனும் மார்க்கஸ் ரெஸ்கோதிக்கும் இல்லாத நிலையில் அன்றூ பிளின்ரோவ் இங்கிலாந்து அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்கின்றார்.

இந்திய- இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான தொடரில் முதல் டெஸ்ட் போட்டி இன்று நாக்பூரில் ஆரம்பமாகின்றது. இங்கிலாந்து அணியில் மேலும் பலர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வேகப்பந்து வீச்சாளர் சைமன் ஜோன்ஸ்

## இந்திய- இங்கிலாந்து டெஸ்ட் போட்டி இன்று

கடந்த திங்கட்கிழமை பயிற்சியின் போது காயமடைந்தார். பந்துவீச வரும்போது தவறி வீழ்ந்ததில் அவருக்கு இடது முழங்கால் பிசகிக் கொண்டு விட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடல் நலக்குறைவு காரணமாக இங்கிலாந்து கிரிக்கெற் அணியே சிதறிக் கிடக்கின்றது. அவர்கள் இந்தியாவுக்கு புறப்படு முன்பே அஸ்லி கைல்ஸ்க்கு ஏற்பட்டிருந்த காயம் காரணமாக சுழல்பந்து வீச்சாளர்களை தேர்ந்தெடுப்பதில் பிரச்சினையிருந்தது.

இங்கிலாந்து அணியின் தேர்வுக்குழுவின் தலைவர் டேவிட் கிரகன்பே, இதுவரை இந்த மாதிரிக் காயமும், உடல்நலக்குறைவும் கூடிய சிக்கலை தான் சந்தித்ததில்லை என்று கூறியுள்ளார்.

இவ்வளவு பெரிய பிரச்சினை இருந்தாலும் அதிலிருந்து மீண்டு தமது நாட்டுக்காக பெருமைப்பட்டு விளையாடக்கூடிய 11 பேர் கொண்ட அணியை நாக்பூரில் களமிறக்குவோம் என டேவிட் கிரகன்பே தெரிவித்தார்.

உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ள வீரர்களுக்குப் பதிலாக இங்கிலாந்தின் 19 வயதுக்குட்பட்டோருக்கான தலைவர் அலிஸ்ரர் குக், வேகப்பந்துவீச்சாளர் ஜேம்ஸ் அண்டர்ஸன் மற்றும் துடுப்பாட்ட வீரர் ஒவைஸ் ஷாப் ஆகியோர் அணியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதிதாக இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்ட வீரர்கள் தமது அணியின் காயத்




திற்கு மருந்திடுவார்களா என்பது நாக்பூர் போட்டியின் போது தெரியவரும்.

இதேவேளை, இந்திய அணியிலும் கூட சில வீரர்கள் காயம் காரணமாக முதலாவது போட்டியில் இடம்பெறுவார்களா என்பது தெரியவில்லை.

இந்நிலையில் முதலாவது போட்டியில் இந்திய - இங்கிலாந்து அணிகளின் பலம் மற்றும் பலவீனம் என்ன என்பது போட்டியின் போதே தெரியவரும்.

### இரு அணிகளும் இதுவரை

இரு அணிகளும் இதுவரை 91 போட்டிகளில் விளையாடியுள்ளன. இதில் 33 போட்டிகளில் இங்கிலாந்து அணியும் 16 போட்டிகளில் இந்திய அணியும் வெற்றி பெற்றுள்ளன. 42 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்தன.

இதேவேளை, இந்திய மண்ணில் 46 போட்டிகளில் விளையாடியுள்ள இங்கிலாந்து அணியினர் 10 போட்டிகளில் வெற்றி பெற்றும் 12 போட்டிகளில் தோல்வியும் அடைந்துள்ளனர். (க-4)

# ராகுல் சொன்ன இரகசியம்



இந்திய அணிக்கு எதிராக திறமையாக விளையாடும் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் யார் என்று கேட்டால் சட்டென்று கூறிவிடலாம் யூனிஸ்கான் என்று. இந்தியாவுக்கு எதிராக டெஸ்ட் போட்டியில் இவரது சராசரி 110. ஒருநாள் போட்டியில் 63. தற்போது நடந்து முடிந்த தொடரிலும் அமர்க்களமாக விளையாடியுள்ளார். தனது அனுபவம் தொடர்பில் இணையத்தளம் ஒன்றுக்கு சுவாரஸ்யமாக பேட்டி அளித்தார்.

அப்பேட்டியில்...

*ஒருநாள் தொடரில் பாகிஸ்தானின் தடுமாற்றத்திற்கு சோயிப் அக்தர், அப்ரிடி இல்லாதது தான் காரணமா?*

முதல் போட்டியில் அக்தரின் இழப்பு குறித்து நாங்கள் பெரிய அளவில் வருத்தப்படவில்லை. ஆனால் அடுத்தடுத்த போட்டியில் இவரது அருமையை நன்றாகத் தெரிந்து கொண்டோம். இவர் இல்லாமல் களமிறங்கிய போட்டியில் மிகப்பெரிய வித்தியாசத்தை பார்க்க முடிந்தது. இந்த நேரத்தில் அப்ரிடிக்கும் காயம் ஏற்பட்டதால் எங்கள் நம்பிக்கை மிகவும் குறைந்தது. சமீபகாலமாக அப்ரிடி, தனது அதிரடி துடுப்பாட்டம், பந்து வீச்சால் அணியின் வளர்ச்சிக்கு மிகவும் துணை புரிந்துள்ளார்.

இவரும் இல்லாததால் அதிக நெருக்கடி ஏற்பட்டது. கூடவே ராணா நவேத்தின்



மோசமான நிலை எங்கள் அணிக்கு பாதகமாக அமைந்தது. கடந்த தொடரில் சச்சின், சேவாக் விக்கெட்டை நவேத் விரைவில் வீழ்த்தியவர். இம்முறை இவரது பந்து வீச்சை இந்திய வீரர்கள் எளிதில் விளாசி விட்டார்கள். அதேசமயத்தில் இந்திய வீரர்களின் ஆட்டம் அருமையாக இருந்தது என்பதையும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

*டெஸ்ட், ஒருநாள் தொடரில் இந்திய அணியில் கண்ட மாற்றங்கள் என்ன?*

டெஸ்ட் தொடரில் தோற்ற இந்திய அணி, ஒருநாள் தொடரில் வென்றதற்கு காரணம் இளம் வீரர்கள் பொறுப்புணர்ந்து விளையாடியதுதான். ஒருநாள் தொடருக்கான இந்திய அணியில் சேர்க்கப்பட்ட இளம் வீரர்கள் அனைவருமே அருமையாக விளையாடினர். இது பயிற்சியாளர் சப்பல், அணித் தலைவர் ராவிட் முயற்சிக்கு கிடைத்த வெற்றி என்று கூட சொல்லலாம்.

*ராவிட் குறித்து உங்கள் கருத்து?*

ராகுல் ராவிட்டை முதலில் எனக்கு சாதாரண வீரராக இருந்தபோது தான் பழக்கம். இங்கிலாந்தில் நடந்த சாம்பியன்ஸ் டிராபி தொடரில் முதன் முறையாக ராவிட்டை நேரில் சந்தித்தேன். அப்போது நான் புதுமுகமாக இருந்தேன். ராவிட், துடுப்பாட்டம் குறித்து நிறைய விடயங்களை எனக்கு கற்றுக் கொடுத்தார். இவ் விடயங்களை இப்போது வரை நான் ஞாபகத்தில் வைத்திருக்கிறேன். ஒவ்வொரு முறை களமிறங்கும் போதும், டிராவிட் அளித்த துடுப்பாட்ட இரகசியங்களை ஒருமுறை மனதில் ஞாபகப்படுத்திக்கொண்டு பிறகுதான் விளையாட ஆரம்பிப்பேன். இவர் பழகுவதற்கும் இனிமையான மனிதர்.

*சவ்ரவ் கங்குலி- ஜான்ரைட், சப்பல்- ராவிட் இந்த இரு கூட்டணியில் நீங்கள் கண்ட வித்தியாசம்?*

அணித்தலைவருக்கு மிகச் சிறந்த உதாரணம் ராவிட். டெஸ்ட் போட்டியில் இவர் எடுத்த ஒவ்வொரு முடிவும் சரியாக இருந்தது. எங்கள் அணி முதல் இன்னிங்ஸில் அதிக ஓட்டம் குவித்தபோது, நெருக்கடியான கட்டத்தில் அனைத்துப் பொறுப்புகளையும் அவரே எடுத்துக் கொண்டார். நெருக்கடியான சமயத்தில் ஆரம்ப வீரராக களமிறங்கி அணிக்கு நல்ல ஆரம்பத்தைக் கொடுத்தார். ராவிட் நினைத்திருந்தால் அந்த நேரத்தில் கங்குலியை



ஆரம்ப வீரராக அனுப்பியிருக்கலாம். அப்படி ஒருவேளை கங்குலி வந்திருந்தால் அவரது விக்கெட்டை நாங்கள் விரைவில் வீழ்த்தியிருப்போம். ஆனால் ராவிட் சமயோசிதமாக செயல்பட்டது பாராட்டத்தக்கது. அதேபோல், ஒரு அணித்தலைவனுக்கு அழகு, அணியில் உள்ள எல்லா வீரர்களையும் மதித்து நடப்பதுதான். இது ராவிட்டிடம் நிறையவே இருக்கிறது. இவைதான் நீங்கள் கேட்ட இரு ஜோடிக்கும் நான் கண்ட வித்தியாசங்கள்.

*ஒருநாள் தொடரில் மகேந்திர சிங் டோனியின் அதிரடி எப்படியிருந்தது?*

மிகவும் பயங்கரமாக இருந்தது. இத் தொடரில் அக்தர் இருந்திருந்தால் டோனி இந்தளவுக்கு விளாசியிருக்க மாட்டார் என சிலர் கருத்துக் கூறினர். இது முற்றிலும் தவறு. தற்போது டோனி மிகச்சிறந்த நிலையில் இருக்கிறார். அக்தர், பிரட் லீ என உலகின் அதிவேகப்பந்து வீச்சாளர் யார் போட்டாலும் சிக்சர் விளாசும் திறமையுடன் இருக்கிறார். இதனால் அக்தர் இருந்திருந்தாலும் டோனியின் அதிரடியில் மாற்றம் இருந்திருக்காது என்பது மட்டும் நிச்சயம். ஆனாலும் இப்போதே இவரை ஆஸ்திரேலியாவின் கில்கிறிஸ்ட்டுடன் ஒப்பிடுவது சரியாகாது. இன்னும் ஒன்றிரண்டு ஆண்டுகளில் டோனியும் நல்ல அனுபவம் பெற்றுவிடுவார். அப்போது இவர்கள் இருவரையும் ஒப்பிடுவது தான் சரியானது.

*யுவராஜ் ஆட்டத்தில் முன்னேற்றம் இருந்ததா?*

யுவராஜ் துடுப்பாட்டத்தில் நல்ல முதிர்ச்சியைக் காண முடிந்தது. முன்பெல்லாம் எல்லா பந்துகளையும் விளாச வேண்டுமென்று துடிப்பார். இம்முறை இவரது ஆட்டத்தில் நிறைய வித்தியாசம் இருந்தது. எந்த இடத்தில் பவுண்ரி அடிக்க வேண்டும் என்பதை சரியாகத் தீர்மானித்து விளாசினார். இனி இவரது ஓட்டக் குவிப்பை கட்டுப்படுத்துவது கடினமான காரியம்தான். (க-4)

# மரியாவுக்கு வந்த ஆத்திரம்!

மரியா ஷரபோவாவை சும்மா இருக்க விடுவதில்லை. ஏதாவது ஒரு பிரச்சினையில் இழுத்துக் கொண்டு தான் இருக்கின்றனர். இவரது நீச்சல் உடை ‘போஸ்’ கிளப்பிய புயல் அடங்குவதற்குள் தாய்நாட்டுப் பாசத்தை மீண்டும் சீண்டிப் பார்க்கின்றனர்.

அழகு மரியா 1987 இல் ரஷ்ய மண்ணில் பிறந்தார். ஐந்து வயதிலே டென்னிஸ்



ராக்கெட்டை பிடித்து கலக்கமாக ஆட, அதிர்ந்து போனார் அனுபவ மார்ட்டினா நவரத்திலோவா.

‘அழைத்து வாருங்கள் அமெரிக்காவுக்கு சூப்பர் ஸ்டாராக மாற்றி விடலாம்’ என்று மரியா அப்பாவுக்கு அன்பு கட்டளையிட்டார். உடனே அவர் ஐந்து வயது மகளை அழைத்துக்கொண்டு அமெரிக்கா புறப்பட்டார். புளோரிடாவில் உள்ள போலிடியரி டென்னிஸ் பயிற்சி அகாடமியில் சேர்த்து விட்டார். அதற்குப் பிறகு மரியா மெகா எழுச்சி கண்டார்.

2004இல் விம்பிள்டனில் சாம்பியன் பட்டம் வெல்ல புகழின் உச்சிக்கு சென்றார். கொள்ளை அழகு கொட்டிக் கிடப்பதால் விளம்பர நிறுவனங்களும் மொய்த்தன. கோடிக்கணக்கில் சம்பாதிக்கத் தொடங்கினார். சமீபத்தில் அமெரிக்காவின் பிரபல ஸ்போர்ட்ஸ் இல்லஸ்டிரேட் பத்திரிக்கைக்கு நீச்சல் உடையில் போஸ் கொடுத்து பரபரப்பு ஏற்படுத்தினார்.

இப்படி டென்னிஸ் அரங்கில் புயலாக வீசிக்கொண்டிருக்கும் இவர், ரஷ்யாவுக்காக பெடரேஷன் கோப்பை உள்ளிட்ட குழுப் போட்டிகளில் பங்கேற்றதில்லை. இதுதான் சர்ச்சையை கிளப்பியுள்ளது. ‘வளர்ந்தது எல்லாம் அமெரிக்காவில். ரஷ்ய மொழியை சரியாகக்கூட உச்சரிக்கத் தெரியவில்லை. அப்படியிருக்க ரஷ்யா மீது எப்படி பாசம் வரும்?’ என சக வீராங்கனைகளே மடக்குகின்றனர். இதற்கு காட்டமாக பதிலடி கொடுத்துள்ளார் மரியா.

‘என்னைப் பற்றி நிறைய வதந்திகள் பரப்பப்படுகின்றது. அதில் இதுவும் ஒன்று. இவ்விடயத்தில் துளிகூட உண்மை கிடையாது. எனது உடலில் ஓடுவது ரஷ்ய இரத்தம். எனது நாட்டுக்காகத்தான் எப்போதும் விளையாடுகிறேன். ஒவ்வொரு போட்டியின் போதும் எனது பெயருக்கு பின் ரஷ்யா என்று தானே போடுகிறார்கள். இதை யாருமே கவனிப்பது இல்லை. ரஷ்ய அணிக்காக பெடரேஷன் கோப்பை போட்டிகளில் விளையாட போதிய நேரம் கிடைக்கவில்லை. அவ்வளவுதான்! இதைப் போய் பெரிய விடயமாக்கி விட்டார்கள். அடுத்த முறை ரஷ்யாவுக்காக பெடரேஷன் கோப்பையில் நிச்சயமாக விளையாடுவேன்’ என்று அடித்துச் சொல்கிறார் மரியா.

வரும் ஏப்ரலில் ரஷ்ய- பெல்ஜியம் அணிகள் பெடரேஷன் கோப்பை போட்டியில் மோதுகின்றன. இதில் சொன்னபடி கலந்து கொண்டு தாய் நாட்டு பாசத்தை நிரூபிப்பாரா மரியா? (க-4)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள்

இல: 08

ஆக்கம்: மூ.விக்னேஸ்வரன் (அதிபர்)
யா/உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை

வினாத்தாள் – II நேரம்: 1 மணி 15 நிமிடம்

**கீழே தரப்பட்டுள்ள பாடலை வாசித்து 1 - 15 வரையான வினாக்களுக்கு விடை தருக.**

எங்கு சென்று வந்தார் எங்கள் அப்பா இன்று
என்ன கொண்டு வந்தார் எங்கள் அப்பா இன்று
கடைக்குச் சென்று வந்தார் கடலை கொண்டு வந்தார்
மீனும் கொண்டு வந்தார் பாணும் கொண்டு வந்தார்
சட்டி கொண்டு வந்தார் பெட்டி கொண்டு வந்தார்
குட்டி பொம்மை ஒன்றை எனக்கும் வாங்கித் தந்தார்

01. இப்பாடலில் சிறப்பிக்கப்படுபவர் யார்?
.......................................................

02. இப்பாடலில் வரும் ஒத்த ஓசைச் சொற்கள் மூன்று தருக?
(1)........................ (2)........................ (3)........................

03. இறக்குமதி செய்யப்பட்ட விளையாட்டுப் பொருள் ஒன்று தருக?
.......................................................

04. பாடலில் வரும் எழுவாய் அடைமொழி?
.......................................................

05. சட்டி பானை செய்பவரை எப்படி அழைப்பர்?
.......................................................

06. பெட்டியில் வரும் உணவுப் பொருட்கள் இரண்டு
(1)........................ (2)........................

07. பாண் தயாரிக்கும் இடத்தை எப்படி அழைப்பர்?
.......................................................

08. கடைகள் பல அமைந்திருக்கும் இடத்தை எப்படி அழைப்பர்?
.......................................................

**சரியான விடையைச் சுற்றிக் கட்டமிடுக.**

09. இப்பாடலைப் பாடியவர் (மகன், மகள், கூறமுடியாது)

பெயராகவும் வினையாகவும் வர வசனம் அமைக்குக.

கடை
10. பெயர் :- .......................................................
11. வினை :- .......................................................

இரண்டு கருத்தைத் தருமாறு வசனம் அமைக்குக

கடலை
12. .......................................................
13. .......................................................

**பழமொழியின் இடைவெளியை நிரப்புக.**

14. கீரைக் கடைக்கும் .......................................................

15. பாடலில் வந்தார் என்ற சொல் எத்தனை தடவைகள் வந்துள்ளன?
.......................................................

**பொருத்தமான ஆங்கில எழுத்துக்களை கூட்டுக்குள் எழுதி சரியான விடையைத் தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| 16. அச்சாறு செய்யும் பழவகை | ☐ | (A) நெல்லி |
| 17. உப்புடன் சேர்த்து உண்ணும் பழம் | ☐ | (B) மாதுளை |
| 18. காய்கள் கொத்துக் கொத்தாக இருக்கும் | ☐ | (C) விளா |
| 19. பழத்தின் விதைகள் கறுப்பு | ☐ | (D) புளி |
| 20. மருந்தாக உதவும் பழம் | ☐ | (E) அன்னாசி |
| 21. கடினமான ஓடுடைய பழம் | ☐ | (F) பப்பாசி |

**கீழே தரப்பட்டுள்ள பந்தியினை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

*சந்திரன் வானத்தில் பவனி வந்து கொண்டிருந்தான். நட்சத்திரங்கள் மின்னிக் கொண்டிருந்தன. உயர்ந்த மரங்களும், வயல் வெளிகளும் பொன்னிறமாகக் காட்சியளித்தன. மெல்லென வீசிய தென்றல் காற்று இதமாக இருந்தது.*

22. வானில் பவனி வந்து கொண்டிருந்ததன் ஒத்தசொல்
.......................................................

23. மின்னிக் கொண்டிருந்ததன் ஒத்தசொல்
.......................................................

24. பொன்னிறமாகக் காட்சியளித்தவை எவை
.......................................................

25. தென்றல் என்பதன் எதிர்ச்சொல் .......................................................

பிரித்தெழுதுக

26. பொன்னிறம் :- .......................................................

27. மேலேயுள்ள காட்சியை எந்நேரத்தில் ரசிக்கலாம்?
.......................................................

28. காற்று வீசும் என்பது போல மழை .......................................................

**பழமொழிகளை நிறைவு செய்க.**

29. காற்றுள்ள போதே :- .......................................................

30. மின்னுவதெல்லாம் :- .......................................................

**வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பாரதி வித்தியாலயத்தில் தங்கியிருந்த மக்களுக்கு நிவாரண உதவியாகக் கிடைத்த பொருட்களின் விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.**

| அரிசி | பால்மா | பருப்பு | SOAP | SUGAR |
|---|---|---|---|---|
| ↑ | ↑ | ↑ | ↑ | ↑ |
| மூடைகள் 1650 | பெட்டி 3923 | பொதி 6154 | கட்டிகள் 6544 | பொதி 7194 |

31. மேலே காட்டப்பட்ட பொருட்களில் மிகப் பெரிய எண்ணிக்கைக்கும் சிறிய எண்ணிக்கைக்குமிடையேயான வித்தியாசம்?
.......................................................

32. பால் மாப் பெட்டிக்கும் பருப்புப் பொதிக்குமிடையேயான வித்தியாசம்?
.......................................................

33. கொண்டு வரப்பட்ட பொருட்களில் பொதிகள் தவிர்ந்த ஏனையவற்றின் மொத்த எண்ணிக்கை?
.......................................................

34. ஒரு சவர்க்காரத்தின் விலை 12.00 ஆயின் முழுச் சவர்க்காரத்தினதும் பெறுமதி என்ன?
.......................................................

35. கொண்டு வரப்பட்ட சீனிப் பொதிகள் குடும்பம் ஒன்றுக்கு 11 வீதம் பகிர்ந்தளிக்கப்பட்டது எனின் எத்தனை குடும்பங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும்?
.......................................................

**சரியான விடையின் இலக்கத்தில் ⊗ இடுக.**

36. பாதிக்கப்பட்டவர்கட்கு வழங்கும் உதவி
[1. நன்கொடை 2. அன்பளிப்பு 3.நிவாரணம்]

37. வெள்ளம் ஏற்படக்காரணம்
[1. வடிகால் அமைப்புக்கள் சீரின்மை
2. பெருமழை 3.தாழ்ந்த பிரதேசம் ]

38. புரதச்சத்துள்ள உணவு
[1. அரிசி 2. பருப்பு 3.பால் மா]


39. சீனிச்சத்து அதிகரிப்பால் ஏற்படும் நோய்
[1. நீரிழிவு 2. குருதியமுக்கம் 3.கசம்]

40. இலங்கையில் பால்மாத் தொழிற்சாலை அமைந்துள்ள இடம்?
[1. பொலனறுவை 2. அம்பேபுஸ்ஸ 3.வெலிசறை]


**கீழே தரப்பட்டுள்ள படங்களுக்குரிய சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**



41. ........................



42. ........................



43. ........................



44. ........................



45. ........................

(07 ஆம் பக்கம் பார்க்க...)

# தீயினால் ஏற்படும் அபாயமும் அதனைக் கட்டுப்படுத்தலும்

*(1) தீப்பற்றுவதற்குரிய காரணிகள்*

தீப்பற்ற ஆரம்பிப்பதற்கு நான்கு காரணிகள் அவசியமானது. *எரிபொருள், *ஒட்சிசன், * வெப்பம், *தீ.

*(2) தீயின் வகைகள்*

A மரம், காகிதம் போன்ற சாதாரண எரிபொருள்களில் ஏற்படும் தீ.

B எண்ணெய், கரைப்பான் போன்ற தீப்பிடிக்கும் திரவங்களில் ஏற்படும் தீ.

C அழுக்கத்திலுள்ள வாயுப் பதார்த்தங்களில் ஏற்படும் தீ.

D மக்னீசியம், அலுமனியம் போன்ற உலோகங்களில் ஏற்படும் தீ.

E மின் உபகரணங்களில் ஏற்படும் தீ.

*(3) தீயினைக் கண்டுபிடிக்கும் கருவிகள் (Fire Detectors)*

தீயினைக் கண்டுபிடிக்கும் கருவிகளில் பல வகையுண்டு. அக் கருவிகளின் வீச்சுக்கேற்ப அவை தகுந்த இடங்களில் வைக்க வேண்டும்.

இக்கருவிகள் தீப்பற்றியுள்ளது என்று அபாய ஒலி மட்டும் எழுப்பும். தீயணைக்க மாட்டாது.

*(4) தீயணைக்கும் வழிமுறைகள்*

*Class A Fire - இவ்வகையான தீயினை நீர் மூலம் கட்டுப்படுத்தலாம்.

*Class B Fire - இவ்வகையான தீயினை நுரை (Foadm) மூலம் கட்டுப்படுத்தலாம்.

*Class C Fire - இவ்வகையான தீயினை நீரினால் அல்லது இரசாயனத் தூளினால் (Dry Chemical Powder) கட்டுப்படுத்தலாம்.

*Class D Fire - இவ்வகையான தீயினை மண்ணால் அல்லது நுரை தீயணை கருவியால் கட்டுப்படுத்தலாம்.

**எஸ்.மகேந்திரராஜன்**

*(5) பார்வையிடல், பராமரிப்பு, பயிற்சி*

அனுபவமற்ற தொழிலாளி தீயணைக்கும் கருவிகளைப் பயன்படுத்தி தீயினைக் கட்டுப்படுத்த முடியாது.

எனவே தீயணைக்கும் பயிற்சி கொடுப்பது அவசியமானது. யாழ்.மாநகர சபை தீயணைக்கும் படையினரிடமிருந்து பயிற்சியைப் பெற்றுக்கொள்ளலாம். தீ ஏற்படக் கூடிய இடங்களினை அடிக்கடி பரீட்சிக்க வேண்டும். தீயணை கருவிகள் முறையாக பேணப்படல் வேண்டும். □

# இல்ல மெய்வன்மைப் போட்டி

வடமராட்சி கிழக்கு செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு செம்பியன்பற்று இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதிபர் சி.ஜெயந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மருதங்கேணி - பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் த.ஜெயசீலன், தாளையடி பங்குத் தந்தை வண.பிதா ஜே.பி.அன்ரனிதாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறைச் சேர்ந்த இ.தாயகனும் கலந்துகொள்ளவுள்ளனர். (கு-35)

# திருகோணமலையில் பதுங்குகுழி அமைக்கின்றனராம் புலிகள்

## கண்காணிப்புக் குழுவிடம் இராணுவம் புகார்

(திருகோணமலை)

திருகோணமலை செல்வநகர் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் பதுங்குகுழியொன்றை அமைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் இது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனவும் கண்காணிப்புக் குழுவிடம் இராணுவம் முறைப்பாடு செய்துள்ளது.

செல்வநகரிலுள்ள அல்லே நகர் எனுமிடத்தில் ஆயுதம் தாங்கிய புலி உறுப்பினர்கள் பதுங்கு குழியொன்றை அமைக்கும் பணியில் ஈடுபட்டதை பிரதேச மக்களும் படையினரும் நேரில் அவதானித்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் இவ்வாறு பதுங்குகுழி அமைப்பது அப்பட்டமான போர் நிறுத்த மீறல் என்று இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

நண்பகல் 12.00 மணியளவில் இவ்வாறு புலிகள் பகிரங்கமாகச் செயற்படுவது போர் நிறுத்த உடன்படிக்கைக்கு குந்தகம் விளைவிக்கும் செயல் எனவும் தலைமையகம் எச்சரித்துள்ளது. (து)

# தரம் - 5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் - 6

அதிகூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு:

01.ம.பார்த்தீபன் - யா/ஆனைப்பந்தி மெ/மி/க.

02.செ.நித்தியானந்தன் பகீரதன் - யா/அ/மி/க/த/ பாடசாலை துணவி.

03.தி.நிரோஜன் -

04.கோ.ஆனந்தகிருஷ்ணன்- யா/சா/இந்து ஆரம்ப பாடசாலை.

05.ச.தக்ஷாயினி - யா/புனித சென் ஜோன் பொஸ்கோ.

## 5ம் தர புலமைப் பரீட்சை வினாத்தாள் - 08

மாணவர் முழுப்பெயர் : ........................................

பாடசாலையின் பெயர் : ........................................

வீட்டின் முகவரி : ........................................


மாணவர்களே! உங்கள் விடைகளை 07.03.2006 இற்கு முன் அனுப்பிவைக்கவும். உங்கள் விடைகளுடன் கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
கல்விப்பகுதி,
வினாத்தாள் இல - 08
இல.3, 2ஆம் ஒழுங்கை,
பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

குறிப்பு :- மாணவர்களின் நலன்கருதி இவ் வினாத்தாள்களை வைத்துக்கொண்டு, வினாக்களுக்கான விடைகளை வேறு ஒரு தாளில் எழுதி கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களை சரியாகக் குறிப்பிடவும்.பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

**வாரணன் ஆக்க பாடத்திற்காகச் செய்த உருவம் இதுவாகும்.**




46. இதன் பெயர் :- ........................................

47. எத்தினத்தில் இது கட்டப்படும் :- ........................................

இது கட்டுவதற்குத் தேவையான பொருட்கள்?

48. ........................ 49. ........................

50. ........................ 51. ........................




மின்கலம் X, Aயும் Bயும் இரண்டு ஆளிகள்

*இரண்டு ஆளிகளும் திறக்கப்படும் போது மின் குமிழ் எரியாது*

**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

52. A ஆளியையும் B ஆளியையும் மூடும்போது மின்குமிழ் (ஒளிரும், ஒளிராது)

53. E யுடன் A ஆளியை மூடும்போது மின்குமிழ் (ஒளிரும், ஒளிராது)

54. B யுடன் A ஆளியை மூடும்போது மின்குமிழ் (ஒளிரும், ஒளிராது)

**கீழே தரப்பட்டுள்ள சம்பவத்தைத் தொடர்ந்து ஆறு வசனங்கள் எழுதுக. ஒரு வசனத்தில் நான்கு சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும்.**

**சுனாமியில் தப்பிய மக்கள் அகதி முகாமில் தங்கியிருந்தார்கள் அவர்களைப் பார்வையிட நானும்...**

55. ----------------------------------------

56. ----------------------------------------

57. ----------------------------------------

58. ----------------------------------------

59. ----------------------------------------

60. ----------------------------------------

## வினாத்தாள் - 06 இன் விடைகள்

| | | |
|---|---|---|
| 01. ஒருவருக்கும் கொடாதவன் | 02. இலுப்பை, வேம்பு, தென்னை | |
| 03. மா, பலா, இலுப்பை | 04. தாலம் | |
| 05. திருமணம் செய்யாதவர் | 06. பேசும் | |
| 07. விருப்பு | 08. நோய்வாய் | |
| 09. வாழை | 10. சகோதரியின் மகள் | |
| 11. பிழை | 12. சரி | |
| 13. பிழை | 14. சரி | |
| 15. பிழை | 16. வல்லாரை | |
| 17. தக்காளிப்பழம் | 18.பொருத்தமானது | |
| 19.பொருத்தமானது | 20.பொருத்தமானது | |
| 21. பொருத்தமானது | 22.அப்பிள் | |
| 23.பாகல் / புடோல் | 24. முருங்கைக்காய் | |
| 25.வாழை | 26. 5 | 27. 5 |
| 28. 16 | 29. இல்லை | 30. 2 |
| 31. 6.00 | 32. `12.00 | 33. 14400 |
| 34. 15.00 | 35. 255.00 | 36. 159.00 |
| 37. 111.00 | 38. 170 | 39. 475 |
| 40., 876 | 41. 2634 | 42. 1197 |
| 43. 279 / 50 | 44. 1317.00 | 45. 25kg 415g |
| 46. வடே | 47. கடலே | 48. தோசே |
| 49. ஆப்ப | 50. முகம் பார்க்கும் கண்ணாடி | |
| 51. ஒளிக்கற்றை | 52. நீர் | 53. சூரிய ஒளி |
| 54. சூரியன் | 55 - 60. பொருத்தமான வசனங்கள் | |

### இந்திய சட்டசபைத் தேர்தல்

# வாக்காளர் இறுதிப் பட்டியல் 7ஆம் திகதி வெளியாகும்?

(சென்னை)

இந்திய சட்டசபை தேர்தலையொட்டி வாக்காளர் பட்டியல் திருத்தும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. 1.1.2006 அன்று 18 வயது நிரம்பியவர்களின் பெயர்களும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டு வருகிறது.

புதிதாக பெயர் சேர்க்க 19 இலட்சம் விண்ணப்ப மனுக்கள் வந்ததால் அதை ஆய்வு செய்து பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போலி வாக்காளர்களை சேர்க்காமல் இருக்க வீடு வீடாக சென்று விசாரணை செய்யும் பணியும் நடந்து வருகிறது.

இந்தப் பணிகளை மேற்கொள்ள மத்திய தேர்தல் ஆணையாளர் கோபால்சாமியும் தமிழ்நாட்டிற்கு வந்து 2 நாட்கள் ஆய்வு செய்தார்.

தற்போது வெளி மாநிலங்களைச் சேர்ந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து விண்ணப்ப மனுக்களை ஆய்வு செய்யவுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி வெளியாக இருந்த வாக்காளர் இறுதிப் பட்டியல் இதனால் தள்ளிவைக்கப்பட்டு இருந்தது.

தற்போது இறுதி வாக்காளர் பட்டியலை எதிர்வரும் 7ஆம் திகதி வெளியிட தேர்தல் ஆணையகம் ஏற்பாடு செய்துள்ளது. இதற்கான பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. (கு)

# புதுச்சேரி சட்டசபை — காலவரையின்றி ஒத்திவைப்பு

(புதுச்சேரி)

புதுச்சேரி சட்டசபை நேற்று முன்தினம் காலவரையின்றி ஒத்திவைக்கப்பட்டது.

புதுச்சேரி சட்டசபை கூட்டத் தொடர் கவர்னர் உரையுடன் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகியது.

24ஆம் திகதி முதல்வர் ரங்கசாமி இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்தார்.

மூன்றாவது நாளாக சட்டசபை நேற்று முன்தினம் கூடியது. சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு தொடர்பாக அரசு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பின்னர் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடந்தது. முதல்வர் ரங்கசாமி பதிலளித்தார்.

பின்னர் சபாநாயகர் ராமச்சந்திரன், சபையை காலவரையின்றி ஒத்தி வைப்பதாக அறிவித்தார். அப்போது நேரம் மதியம் 3.10 மணியாகும். (கு)

## இந்திய வலம்


# பெற்றோல், டீசல் விலை 30 ரூபாவால் உயர்வு!

டீசல் உட்பட பெற்றோலிய பொருட்களின் விலை நேற்று முதல் 30 ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

பெற்றோல், டீசல் விலையை ஒரு லீற்றருக்கு 30 ரூபாவாலும் எல்.பி.ஜி எனப்படும் பெற்றோலிய எரிவாயு விலையை ஒரு கிலோவுக்கு 30 ரூபாவாலும் நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்திய அரசு உயர்த்தியுள்ளது.

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்திருப்பதால் ஏற்பட்டுள்ள தாக்கத்தை சமாளிப்பதற்கும் உதவித் தொகை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கும் பெற்றோல், டீசல், எல்.பி.ஜி காஸின் விலை உயர்த்தப்படுவதாக அரச அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த ஆண்டு இனி பெற்றோலிய பொருள்களின் விலை உயர்த்தப்படாது என்பதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிப்பதாகவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (கு)



பொருளாதார ஆய்வறிக்கை 2005–06 இன் நகல்களை பாராளுமன்றத்திற்குள் அதிகாரிகள் எடுத்துச் செல்வதைக் காணலாம்.

# தேர்தலில் தனித்தே போட்டி!

## காமராஜர் தேசிய காங்கிரஸ் அறிவிப்பு


(சென்னை)

எதிர்வரும் சட்டமன்றத் தேர்தலில் காமராஜர் தேசிய காங்கிரஸ் சென்னையிலுள்ள 14 தொகுதியிலும் தனித்து போட்டியிடவுள்ளது.

மைலாப்பூர் தொகுதி வேட்பாளராக அக்கட்சியின் நிறுவனமும் மற்றும் பொதுச் செயலாளருமான எம்.எஸ்.ராஜேந்திரன் போட்டியிடுகிறார்.

காமராஜர் உருவம் பொருந்திய மூவர்ணக் கொடியுடன் கட்சி பிரசாரத்தை மேற்கொள்ளும். (கு)

# அ.தி.மு.கவுடன் விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணி



எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவுடன் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கம் கூட்டணியமைத்துப் போட்டியிடவுள்ளது.

விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலர் தொல்.திருமாவளவனிற்கும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கும் இடையே நேற்று நடைபெற்ற சந்திப்பில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

தி.மு.க கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தையும் இணைப்பதற்கு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் முயற்சிகளை மேற்கொண்ட போதும், அது தொடர்பில் தி.மு.க பாராமுகமாக இருந்து வந்தது.

இந்நிலையில் நேற்று அவசர அவசரமாக விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்தின் பொதுச் செயலர் தொல்.திருமாவளவனை தமிழக முதல்வர் ஜெயலலிதா போயஸ் தோட்டத்திற்கு அழைத்து பேச்சு நடத்தினார்.

இந்த பேச்சுக்களின் போது எதிர்வரும் தமிழக–புதுவை சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.கவும் விடுதலைச் சிறுத்தைகளும் இணைந்து போட்டியிடுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஒன்பது தொகுதிகள் விடுதலைச் சிறுத்தைகள் இயக்கத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பிற்குப் பின்னர் தொல். திருமாவளவன் கருத்து வெளியிடுகையில், அ.தி.மு.கவுடனான கூட்டணி மனநிறைவைத் தருவதாகவும் ஒதுக்கப்பட்ட தொகுதிகள் எவை எவையென இன்னும் ஓரிரு நாட்களில் தெரியவரும் எனத் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.கவுடனான கூட்டணியால் பா.ம.கவுடனான உறவில் பாதிப்பு ஏற்படாது அந்த உறவு தொடரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (கு)

# தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலை கண்டி மாவட்டத்தின் மூன்று தொகுதிகளில் நடாத்துவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிபதிகளான கே.ஸ்ரீபவன், சிசிர டி அவ்ரூ ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பு மனுக்கள் இளம் வேட்பாளர்களின் வயதுப் பிரச்சினையால் நிராகரிக்கப்பட்டது தொடர்பான தீர்ப்பு வழங்கப்படும்வரை கம்பளை, உடபலவத்தை, பதஹேவ கெந்த ஆகிய தொகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கு இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளனர்.

இதே பிரச்சினையில் கொழும்பு மாநகர சபை தேர்தலை நடத்துவதற்கும் மேன் முறையீட்டு நீதிமன்றம் ஏற்கனவே தடையுத்தரவு பிறப்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (து)

# கொழும்பு தேர்தல் தடையால் ஏற்பட்ட பிரச்சினை இதர தேர்தல்களும் பாதிக்கப்படுமா என ஐயம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை தேர்தலுக்கு நீதிமன்றம் விதித்துள்ள தடையை எதிர்த்து தேர்தல் அணையத்தால் விரைவில் மனு தாக்கல் செய்யப்பட உள்ளதாகவும் உயர் நீதிமன்றத்தில் இந்த உத்தரவுக்கு எதிரான விடயங்களை எடுத்துக்கூறுமாறு தேர்தல் ஆணையாளர் ஏற்கனவே சட்டமா அதிபருக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் தெரிகிறது.

இதேவேளை, 18 வயதிற்குக் குறைவான வேட்பாளர் ஒருவரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் வேட்புமனு நிராகரிக்கப்படும் எனவும், இவ்வாறான 50க்கும் மேற்பட்ட வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியைப் போன்று அவர்களும் நீதிமன்றத்தை நாடினால் கொழும்பைப் போன்று ஏனைய இடங்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படக்கூடும் என்றும் தேர்தல் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

# ஐ.நா. அமைப்பில் மறுசீரமைப்பு ஜயந்த தனபால வலியுறுத்தல்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகமாக தான் தெரிவு செய்யப்பட்டால் அந்த அமைப்பில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படும் என்று இலங்கை சார்பில் வேட்பாளராக நிறுத்தப்பட உள்ள ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஜயந்த தனபால,

ஐ.நா.வின் பாதுகாப்பு சபையில் இடம் பெற்றுள்ள பல நாடுகள் இந்த மறுசீரமைப்புப் பற்றி ஏலவே பரிந்துரைத்துள்ளன.

இதேவேளை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் தலையிடுமாறு இலங்கை அரசாங்கம் கேட்டுக்கொண்டால் தான் ஐ.நா.அமைப்பு தலையிடும் என்றார்.

இத ஒருபுறமிருக்க ஜயந்த தனபாலவை வேட்பாளராக முன் நிறுத்துவதில் இலங்கை பெருமை கொள்கிறது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். (க)

## திருத்தல யாத்திரை

(யாழ்ப்பாணம்)

தவக்காலத்தில் யாழ்.கத்தோலிக்கர் மேற்கொள்ளும் பாலைதீவு, புனித அந்தோனியார் திருத்தல யாத்திரை விழா எதிர்வரும் மார்ச் மாதம் 17, 18, 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

வருடா வருடம் இவ் யாத்திரை விழாவில் பங்கெடுக்கும் பக்தர்கள் குருநகர்– வலைப் பாடு ஊடாக சென்று வருவது வழமை.

இவ்வாண்டு குருநகர் துறைமுகமூடா கச் செல்லும் பக்தர்கள் உடனடியாகத் தங் கள் பெயர் விபரங்களை குருநகர் பங்குத் தந்தையிடம் கொடுத்துதவுமாறு யாழ். ஆயரின் செயலாளர் அருட்தந்தை எஸ்.ஏ. றொஷான் கேட்டுள்ளார்.

இதேவேளை பக்தர்களின் பயணத்திற்கு 512 ஆவது இராணுவக் கட்டளைப் பிரிவின் அனுமதி பெற வேண்டும் எனத் தெரிவிக் கப்படுகின்றது. (க-4)

### பறவைக் காய்ச்சல் அச்சம் கோழி விற்பனையில் வீழ்ச்சி

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் பறவைக் காய்ச்சல் நோய் அச்சத்தால் அங்குள்ள கோழிகளை விற்பனை செய்ய முடியாதுள்ளதாக கோழி வளர்ப்போர் தெரிவித்துள்ளனர். இதேவேளை மாட்டிறைச்சிக் கடைகளில் இறைச்சி விற்பனை அதிகரித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (க-72)

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

64 மீள்பார்வை


''தங்கப்பதக்கம்'' படத்தில் ...

இந்த அனுபவத்தின் அடிப்படையில்தான் கௌரவம் படத்தின் இரண்டு வேடத்தையும் நானே போட்டுக்கொண்டேன். ஏனென்றால் கௌரவத்தில் பாரிஸ்டர் ரஜனிகாந் நடிக்கும்போது சின்னவன் கண்ணனும்நடிப்பான் அந்தக் கண்ணன் வேடத்திற்கு வேறு யாரையாவது போட்டால் கண்டிப்பாக அவரும் சிறப்பாக நடிக்க ஆசைப்படுவார். என்னை மீற வேண்டும் என்று தான் நினைப்பார். ஆகவே, என்னுடைய பாரீஸ்டர் ரஜனிகாந் பாத்திரம் அடிபட்டுப்போய்விடும். கண்ணன் நடிக்கும் போது பாரீஸ்டர் ரஜினாந் நடித்தார் என்றால் கண்ணன் ரோல் அடிபட்டுவிடும். ஆகையால் மற்றவர்களை நடிக்க வைத்தால் அவர்கள் நன்றாகத்தான் நடிப்பார்கள். ''ஏம்பா இந்த இடத்தில் நீ நடிக்காமல் இரு... என்றால் கோபித்துக்கொள்ள மாட்டார்களா?


''இருவர் உள்ளம்'' படத்தில் சரோஜாதேவியுடன்...

டைரக்டர் பிரசாத் சொன்னார் என்பதற்காக இருவர் உள்ளம் படத்தில் நான் விட்டுக்கொடுத்து நடித்தேன். ஆனால் எல்லோரிடமும் அதை எதிர்பார்க்க முடியுமா? சிவாஜி மட்டும் பெயர் எடுத்துக்கொள்ள நினைக்கிறார் என்றும் சொல்ல மாட்டார்களா?

ஆகையால் தான் இந்தத் தொல்லையே வேண்டாம் என்று நானே இரண்டு வேடங்களிலும் நடித்தேன். எனவேதான் கௌரவம் வெற்றியடைந்தது.


நிஜ வாழ்க்கையில் பெரியப்பாவும் தம்பி மகனும் அச்சடித்தது போல் ஒன்று போலவா இருப்பார்கள். காட்சிக்கு காட்சி இருவர் நடிப்பையும் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இரண்டு கேரக்டர்களிலும் நானே நடித்தேன்.

டி.எஸ்.என்: பாரிஸ்டராக நடித்த நீங்கள் அதன் பின் ஒரு ஸ்ட்ரிக்ட் பொலிஸ் ஆபிசராக நடித்து புகழ் பெற்ற படம் தங்கப்பதக்கம் அந்தப்படத்தைப்பற்றி... ?

சிவாஜி: ஏற்கனவே செந்தாமரை என்றொரு நடிகர் தங்கப்பதக்கம் கதையை நாடகமாக நட்த்திக்கொண்டிருந்தார். அந்த நாடகத்தில் என்னுடன் இருந்த கண்ணன் பார்த்துவிட்டு அதைப்பற்றி என்னிடம் கூறினார். எனவே, நான் அண்ணாமலை மன்றம் சென்று அந்த நாடகத்தைப் பார்த்தேன். பார்த்த பிறகு செந்தாமரையைக் கூப்பிட்டு ''தங்கப்பதக்கம் கதையை என்னிடம் கொடுங்கள் நான் அதைநாடகமாகவும், படமாக்வும் எடுக்கி றேன். நீங்களும் என்னுடன் நடிக்கலாம்'' என்றேன். அவரும் பெரியமனதோடு ஒத்துக்கொண்டார். நான் கதையை வாங்கி அதை முழுவதுமாக மெருகேற்றி முதலில் நாடகம் ஆக்கினேன் . மகத்தான வர வேற்பைப்பெற்றது. அதைத் தான் படமாக எடுத்தோம். தங்கப்பதக்கம் என்பது கடைசியில் பெற்ற மகனையே சுட்டுவிட்டேன் என்பதற்காக ஒரு மடல் கொடுக்கிறார்களே அதுவல்ல. தங்கப்பதக்கம் என் பது அந்த பொலிஸ்ஆபீசரின் குணாதிசயம் தான். பொலிஸ்காரர்கள் மக்களிடம் எப்படி இருக்க வேண்டும்? தன்னுடைய கடமையை எவ்வாறு செய்யவேண்டும் ? என்ற உண்மைகளை எடுத்துச் சொன்ன கதை அது. சட்டத்தை காப் பாற் றுகிற பாத்திரம் அது. ஆகையால் தங்கப்பதக்கம் என்றால் அந்தக் கடமை தவறாத பொலிஸ் அதிகாரி தான் தங்கப்பதக்கம். இவையெல்லாம் பொலிஸ் டிப்பார்ட்மென் தெரிந்துகொள்வதற்காகவும் மக்கள் அதை உணர்வதற்காகவும் தான் அந்தக் கதையை வாங்கி எஸ். பி.சௌத்திரி பாத்திரத்தில் நடித்தேன். அதில் என்னோடு கேயார் விஜயா அவர்கள் மிக நன்றாக நடித்தார்கள். அவர்கள் என்னோடு பல படங்கள் நடித்திருக் கிறார்கள்.


லால் பகதூர் சாஸ்திரியிடம் தேச நலனுக்காக நிதி அளித்த போது...

திரைப் படம் வெற்றிகரமாக ஓடியது. தெலுங்கிலும் டப் செய்யப்பட்ட இந்தப்படம் பல கோடி ரூபா வசூலைத் தந்தது.


எல்லையில் ஜவான்களை மகிழ்விக்கச்சென்ற கலைஞர்களை காமராஜர் வாழ்த்தியபோது....

### சத்திரபதிசிவாஜியாக...

டி.எஸ்.என்: 1952இல் வெள்ளித்திரைக்கு வந்த பின் உங்களுக்கு சிவாஜி என்ற பட் டத்தை வாங்கித்தந்த சத்திரபதி சிவாஜி மகா ராஜா வரலாற்றை ஒரு முழு நீளப்படமாக எடுத்து அதில் நீங்கள் சிவாஜியாக நடித்திருக்கலாம் அல்லவா? அந்த முயற்சியை ஏன் எடுக்க வில் லை? சிவாஜி அண்ணா அவர்கள் எழுதிய சிவாஜி கண்ட இந்து ராஜ்சியம் நாடகத்தில் எனது பதினெட்டுவயதில் சிவாஜியாக நடித்தேன். அதனால்த் தான் சிவாஜி கணேசன் ஆனது. அடுத்து '' ராமன் எத்தனை ராமனடி'' என்ற படத்தில் ஒரு ஓரங்க நாடகத்தில் சிவாஜியாக நடித்தேன் . தொடர்ந்து ''துக்காராம்'' என்ற படத்திலும் நான் மராட்டிய மன்னன் சிவாஜியாக நடித்தேன்.

ஏதோ காரணத்தினால் சிவாஜியை முழு நீளப்படமாக எடுக்க வாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஆனால் நீங்கள் டெலிவிசன் தயாரிப்பாளராக இருந்த போது வம்பாய் தொலைக் காட்சி நிலையத்திற்காக''சத்திரபதி சிவாஜி என்ற தொலைக்காட்சிப்படத்தை என்னை வைத்து எடுத்தீர்கள் அல்லவா ? அந்தப்படத்தில் நான் சிவாஜியாக நடித்தது பற்றிய விபரங்களை நீங்கள் தான் சொல்லவேண்டும். (தொடரும்)



## தவக்கால சிந்தனை

### "இறைவா! எம் மேல் இரக்கம் வையும், நாங்கள் பாவம் செய்தோம்"

தவக்காலம் இதயத்தை கிழித்துக் கொள்வதற் காக தரப்படும் காலம்! தவத்தின் அடையாளமாக ஆடை களை கிழிததுக் கொள்வதற்காக அல்ல! இதயத்தை கிழிய்ப தென்பது இரத்த களமாக்கி, புண்களை தாங்கு வதில்லை! மாறாக ஏற்கனவே மனதில் பட்ட புண்களை ஆற்றி சுகப்படுத்துவதற்காக! இறையருளை சுவாசிக் காமல் உறவுகளை நேசிக்காமல் இறை வார்த்தைகளை ஏற்காமல் பட்ட காயங்களை ஆற்றுவதற்காக கடவுளை சிறப்பாக நாடும் காலம் இது. முழு இருதயத்தோடும் இறைவனிடம் திரும்ப வருவதற்கான முயற்சி இது. இதற்கு ஒரே வழி இறைவனிடம் ஒப்புரவாகி அவரது விருப்பத்தை நெஞ்சில் திட மனதுடன் ஏற்பது மட்டுமே! இந்த முயறசியில் மிக உன்னிப்பாக கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அது எந்த சூழலிலும் இந்த மனமாற்ற முயற்சி வெளிவேடமாகி விடாதபடி, உளதின் ஆழத்தில் இறைவனோடு மகிழ்ச்சியுடன் உறவாடுவதாக அமைத்துககொள்ள வேண்டும் என்பதே!

காவலன்

## விசாரணைகள் தொடர்கின்றன

(கொழும்பு)

இலங்கையில் 9 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளமை தொடர்பாக கிடைத்த முறைப்பாடுகள் குறித்து தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் ஆரம்பித்த காலம் முதல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

அன்று தொடக்கம் காணாமல் போதல் தொடர்ந்து வருகிறது. காணாமல் போயுள்ளமை குறித்து கிடைத்த முறைப்பாடுகளில் 20 ஆயிரம் முறைப்பாடுகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நடவடிக்கை பணிப்பாளர் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியாவிற்கு வந்திருந்த போது இந்திய ஊடகவியலாளர்களின் கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே இதனைத் தெரிவித்துள்ளார். (த-9)

## சமுர்த்தித் திட்டத்தை அமுல்படுத்த சமூகங்களிடையே ஒற்றுமைவேண்டும்

(கொழும்பு)

வறுமையை இல்லாதொழிக்கும் இலக்கை அடைவதற்கு பரஸ்பர புரிந்துணர்வு, நல்லுறவு , ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் சமுர்த்தித்திட்டத்தை மேற்கொள்ளவேண்டும் என்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

நாட்டில் சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை கடைப்பிடிக்காத விடத்து சமுர்த்தித்திட்டத்தை பயனுள்ளதாக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற சமுர்த்திப்பொதுச் சங்க கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத்தெரிவிக்கையில், சமுர்த்தித் திட்டம் பொது மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டதொன்றா கும். எனவே இந்தத்திட்டத்தை முறையாக அமுல் படுத்துவதற்கு பொதுமக்கள் சரியான தகவல்களை வழங்குவதில் தம்மை அர்ப்பணித்து செயலாற்றவேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார். (சு-7)






68 இலட்சம் ரூபா பெறுமதியான 2 அம்புலன்ஸ் வண்டிகளை யாழ். திருச்சிலுவை வைத்தியசாலை நடமாடும் சேவைக்கென கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் தலைமையில் யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் கையளிப்பதை படங்களில் காணலாம். (படங்கள்:திலீவின்பன், எஸ்.ரி.ராஜா)

# உண்ணாவிரதத்தை கைவிட்டார் சதாம்

(அம்மான்)

ஈராக் நீதிமன்றம் தனக்கு எதிரான வழக்கு விசாரணையில் பாரபட்சமாக நடப்பதாகக் கூறி கடந்த 11 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வந்த சதாம் உசேன், நேற்று முன்தினம் தனது உண்ணா விரதத்தை நிறுத்தியுள்ளதாகத் தெரி விக்கப்



படுகிறது.

ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சியில் இருந்தபோது தனக்கு எதிராக செயல்பட்ட ஏராளமான மக்களை கொன்று குவித்ததாக புகார் எழுந்தது.

அமெரிக்க இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ள சதாம் உசேன் தற்போது ஈராக் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சதாம் மீதான வழக்கு விசாரணை ஈராக் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் ஈராக் நீதிமன்றச் செயற்பாடுகள் ஒருதலைபட்சமாக இருப்பதாகவும், தனது வழக்கு விசாரணையில் நீதிமன்ற நடவடிக்கைகள் திருப்தியளிக்கவில்லை எனவும் சதாம் உசேன் குற்றஞ்சாட்டினார். நீதிமன்ற செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கிய சதாம் கடந்த 11 நாட்களாக உணவு எதுவும் சாப்பிடவில்லை. இதனால் அவரது உடல்நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டது.

சதாமின் வக்கீல் நேற்று முன்தினம் அவரை நேரில் சந்தித்து பேசினார். ஏழு மணிநேரம் நீடித்த இச்சந்திப்பின் போது உடல்நிலையை கருத்தில் கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை கைவிடுமாறு சதாமிடம் அவரது வக்கீல் கேட்டுக்கொண்டார். இதனைத் தொடர்ந்து உண்ணாவிரத போராட்டத்தை சதாம் கைவிட்டார். (தி)

# அமெரிக்க அதிபர் புஷ்ஷுக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் இம்ரான்கான்

(லாகூர்)


பாகிஸ்தானுக்கு அமெரிக்க அதிபர் புஷ் வரும்போது அவருக்கு பகிரங்க எதிர்ப்பை காட்ட தயாராகி விட்டார் முன்னாள் கிரிக்கெற் அணி கப்டனும், தெரிக்-இ-இன் சாப் என்ற கட்சியின் தலைவருமான இம்ரான் கான்.

பாகிஸ்தான் நாட்டில் கிரிக்கெற்றில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த இம்ரான் கான், சில ஆண்டுகளுக்கு முன்பு அரசியல் கட்சியை ஆரம்பித்தார். அதிபர் முஷாரப்புக்கு எதிராக செயல்படும் இம்ரான், அவ்வப்போது அமெரிக்காவுக்கு எதிராக அறிக்கை வெளியிட்டு பரபரப்பை எற்படுத்துவார். முஸ்லிம்களுக்கு எதிராக அமெரிக்க அதிபர் புஷ் தொடர்ந்து செயற்பட்டு வருகிறார். இதற்கு பாகிஸ்தான் எதிர்ப்பு குரல் கொடுக்க வேண்டும். நாம் சும்மா வேடிக்கை பார்க்கக்கூடாது என்று ஆவேசமாக கூறும் இம்ரான், தன் ஆதரவாளர்களுடன் லாகூரில் ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார்.

லாகூர் சமான் பார்க் பகுதியில் உள்ள தன் பங்களாவில் அவர் ஆலோசனை நடத்திக்கொண்டிருந்த போது, இராணுவத்தினர் அந்த வீட்டை சுற்றிவளைத்துக் கொண்டனர். உங்களை வீட்டுக்காவலில் வைக்க உத்தரவு வந்துள்ளது. அதனால் எங்களை கேட்காமல் எங்கும் போகக் கூடாது என்று இம்ரானுக்கு இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால், அந்தப் பகுதியில் பெரும் பதட்டம் ஏற்பட்டது. வெளியில் ஆர்ப்பாட்டம் செய்த அவரின் ஆதரவாளர்களை பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்துவிட்டனர்.

உலகம் முழுக்க 125 கோடி முஸ்லிம்கள் உள்ளனர். அவர்களுக்கு பேச்சுரிமை கிடையாது. சில முஸ்லிம் நாடுகளை ஆதிக்கம் செலுத்துகிறது அமெரிக்கா. அதிபர் புஷ்ஷின் உத்தரவின் பேரில் தான் சில நாடுகளில் முஸ்லிம்கள் தாக்குதலுக்கும் உள்ளாகின்றனர். அவர்களின் சார்பில் நாம் நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அதற்காக நாம் பிரதமர் சவுகத் அஜீஸ், முஸ்லிம் நாடுகளுடன் பேசவேண்டும் என்றும் இம்ரான் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இம்ரான் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதை பாகிஸ்தான் அரசு மறுத்தது. பதட்டம் ஏற்படக்கூடாது என்பதால், அவரின் ஆதரவாளர்களை சிறையில் அடைத்ததாக அதிகாரிகள் கூறினர்.

பாகிஸ்தானில் இம்ரான் கட்சிக்கு ஓரளவு ஆதரவுள்ளது. இருந்தாலும் அவர்களை அவ்வப்போது அதிபர் முஷாரப் அடக்கி விடுவதால்த எதுவும் செய்ய முடியாமல் இம்ரான் திணறுகிறார். (தி)



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டுள்ள தலிபான்கள் மற்றும் அல்-குவைதா கைதிகள் திடீரென கலவரத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து சிறைச்சாலையை சுற்றிலும் அமெரிக்க வீரர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## பிலிப்பைன்ஸில்

# இந்திய இளைஞர் சுட்டுக்கொலை

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இந்திய இளைஞர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சுட்டுக்கொல்லப்பட்டார்.

பஞ்சாப் கபூர்தலா நகரத்தில் சந்த்புரா பகுதியைச் சேர்ந்த 26 வயதான ராஜேஷ் குமார் என்ற இளைஞர் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிலிப்பைன்சுக்கு சென்றார். ஞாயிற்றுக்கிழமை மணிலாவில் தனது மனைவியுடன் தேவாலயத்திற்கு வெளியே நின்று கொண்டிருந்த போது, சுட்டுக்கொல்லப்பட்டதாக அவரது குடும்பத்திற்கு தகவல் வந்தது.

மணிலாவில் பஞ்சாப்பை சேர்ந்த இந்தியர் கொல்லப்படுவது இந்த ஆண்டில் இது மூன்றாவது முறை. ஏற்கனவே, கடந்த ஜனவரியில் அலக் கிராமத்தைச் சேர்ந்த குல்தீப் சிங்கும், அஜ்லா கிராமத்தைச் சேர்ந்த அமர்ஜிசிங்கும் கொல்லப்பட்டனர். இவர்கள் இருவருமே வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலைச் செய்து வந்தனர். இவர்களைப் போலவே ராஜேசும் அங்கு வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழிலை செய்துவந்தார்.

பிலிப்பைன்ஸில் கடந்த மூன்றாண்டுகளாக வட்டிக்கு பணம் கொடுக்கும் தொழிலைச்செய்துவந்த பஞ்சாப் இனமக்களையே குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு முன் எப்போதும் இல்லாத வகையில் பஞ்சாப் இனத்தவர் 12பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் அதிகம் பேர் தோபாவை சேர்ந்தவர்கள். மேலும் இந்தத் தாக்குதல்கள் மணிலாவை சுற்றியுள்ள பகுதியிலேயே அதிகமான அளவில் நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

# பிலிப்பைன்ஸ் அரசைக்கவிழ்க்க சதி பொலிஸ் அதிகாரிகள் நால்வர் கைது

பிலிப்பைன்ஸ் அரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம் தீட்டியதாக குற்றம் சாட்டப்பட்டு நான்கு பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் 16 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயாவின் ஆட்சியை கவிழ்க்க அந்நாட்டு இராணுவ உயரதிகாரிகளும் முக்கிய எதிர்க்கட்சிகளும் சதி செய்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், அரசிற்கு எதிரான பல பேரணிகளும் நடத்தப்பட்டன. இதனால் நாடு முழுவதும் அவசரநிலை பிரகடனம் செய்ய அதிபர் குளோரியா கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார். அரசைக் கவிழ்க்கும் சதியில் ஈடுபட்டதாகக் கூறி அந்நாட்டு கடற்படை தளபதி மேஜர் ஜெனரல் ரெனட்டோ மிராண்ட பதவிநீக்கம் செய்யப்பட்டார்.

இந்நிலையில் சதியில் தொடர்புடைய பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் கைது செய்யப்பட்டனர். இவர்களில் தலைமை கண்காணிப்பாளர் மார்சிலினோ பராங்கோ சிறப்பு அதிரடிப்படைத் தலைவர் பதவியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமையன்று நீக்கப்பட்டார். இவரும், இவருக்கு கீழ் பணிபுரிந்த மூவரும் தடுபுக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் 16 பேர் மீதும் அரசைக் கவிழ்க்க சதி செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (தி)

## திருகோணமலை மாவட்டத்தில்

# 787 தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் நிராகரிப்பு!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வாக்களிக்க திருகோணமலை மாவட்டத்தில் தபால் மூலம் விண்ணபித்தவர்களில் 787 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக மாவட்டத்தின் உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

7ஆயிரத்து 489தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்கள் கிடைத்த அதே வேளை, அவற்றில் 10.5 சதவீதம் நிராகரிக்கப்பட்டன. தாமதமாக கிடைத்தமையின் காரணமாகவே இந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக அவர் கூறினார்.


பொதுத் தேர்தலுடன் ஒப்பிடும்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் தபால் மூலமான வாக்குப் பதிவுகள் எதிர்வரும் 20ஆம், 21ஆம் திகதிகளில் இடம்பெறவிருக்கின்றன. (க-7)

## கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம் விதிப்பு

சட்டவிரோத சாராயமான 96ராம்ஸ் கசிப்பினை வீட்டில் வைத்திருந்த குற்றச்சாட்டின் பெயரில் நெல்லியடி பொலிஸாரால் கைதுசெய்யபட்ட நபர் ஒருவரை கடந்த 27ஆம் திக்தி பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தியவேளை அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

இதனையடுத்து மேற்படி சட்டவிரோத சாராயமான கசிப்பினை வைத்திருந்த குற்றத்திற்காக குறித்த நபருக்கு நீதிபதி க.அரியநாயகம் 75ஆயிரம் ரூபா அபராதம் வித்தார். மேற்படி அபராதத்தை செலுத்தத் தவறின் ஒருவருட கடூழிய சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டு தீர்ப்பளித்துள்ளார். (க-10)



பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியல் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பங்குத்தந்தை பயஸ் இருதயதாஸ் மற்றும் கல்லூரி அதிபர் இ.நாகேந்திரராஜா ஆகியோருக்கு மாணவ இல்லத் தலைவர்களினால் வழங்கப்படும் அணிவகுப்பு மரியாதையைப் படத்தில் காணலாம். (படம்:-ச.செல்வக்குணச்சந்திரன்)

மனிதன் ஓர் உண்மையைக் கண்டு பிடித் தான் என்றால், இருட்டறையில் ஓர் தீபத்தை ஏற்றினான் என்று பொருள்.

-இங்கர்சால்

வலம்புரி

## ஜெனீவாப் பேச்சில் அரசியல் இலாபம் தேடாதீர்

யுத்தநிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றது எனத் தீர்மானிக்குமாறுகோரி உயர் நீதிமன்றில் ஜே.வி.பியும், ஜாதிக ஹெலஉறுமயவும் மனுத்தாக்கல் செய்துள்ளன.

2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனும் கைச்சாத்திட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையானது நாட்டின் அரசியல் யாப்பிற்கு உடன்பாடானதல்ல என்பது ஜே.பி.வி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமயவின் வாதம்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அமைவாகவே மேற்கூறப்பட்ட இரண்டு கட்சிகளும் ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை ஆதரித்திருந்தன. எனினும் அண்மையில் ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தையில் யுத்தநிறுத்த உடன்படிக்கையில் ஒரு மாற்றங்களும் செய்ய முடியாது போயுள்ளது.

அரசு எதிர்பார்த்தது போல யுத்தநிறுத்த உடன்படிக்கையில் மாற்றம் செய்ய முடியாமல் போனமையானது ஜே.வி.பிக்கும் ஜாதிக ஹெல உறுமயவுக்கும் பெரும் தலைக்குனிவாகி விட்டது.

இதனைச் சகித்துக் கொள்ள முடியாத இரண்டு கட்சிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றதெனத் தீர்மானிக்கக்கோரி உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்துள்ளன.

இது ஒரு புறம், மறுபுறத்தில் அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் விடுதலைப்புலிகளின் காலில் அரசு வீழ்ந்து விட்டது எனக் கூறியுள்ளார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை மாற்றியே தீருவோம் எனக் கூறிய அரசு ஜெனீவாவில் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் போனமை ஏன் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இங்குதான் அரசியல்வாதிகளின் குத்துக்கரணம் தெரிகின்றது. ஜெனீவாவில் அரசும் விடுதலைப்புலிகளும் சுமுகமாகப் பேச்சுவார்த்தை நடத்தியதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஜே.வி.பியும் ஹெலஉறுமயவும் நீதிமன்றிற்குச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சியோ அரசுக்கு ஆத்திரமூட்டும் விதமாகக் கருத்து வெளியிட்டுள்ளது.

அது இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டும். அதன் மூலமாக மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற பரந்த கொள்கைப்பாடு அரசியல்வாதிகளிடம் இல்லையென்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகின்றதல்லவா?

எதுவாயினும் அரசியல் இலாபத்திற்காக ஜெனீவாப் பேச்சுவார்த்தை குறித்து எதிர்மறையான கருத்துக்களை தவிர்த்துக் கொள்வது அரசியல்வாதிகள் இந்த நாட்டிற்கும் மக்களுக்கும் செய்யும் பெருந்தொண்டாகவிருக்கும்.

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளருடன் பொலிஸ்மா அதிபர் உரையாடினார்

## ஜாதிக சேவய சங்கமய கண்டனம்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுக்களில் தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா. நடேசனுடன் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ உரையாடியிருப்பதன் மூலம் தமிழீழ காவல்துறைக்கு சர்வதேச அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது என்று ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்கமான ஜாதிக சேவ சங்கமய குற்றம்சாட்டியுள்ளது.

ஜாதிக சேவய சங்கமயத்தின் செயற்குழு உறுப்பினர் சுனில் டி.சில்வா ஊடகவியலாளர்களிடம் இது தொடர்பில் கருத்துக் கூறுகையில்,

ஜே.வி.பியினருக்கும் ஜாதிக ஹெல உறுமயவினருக் கும் தேர்தல் காலத்தில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டிருந் தும் கூட இலங்கையின் அரசாங்கக் குழுத்தலைவர் நிமால் சிறிபால டி சில்வா, தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக் களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்துள்ளார்.

சிறார் படைசேர்ப்பு விவகாரத்தில் ஜே.வி.பி. கடும் போக் கான நிலையை மேற்கொண்டிருந்த போதும் பிரச்சினைக் குத் தீர்வு காண அரசாங்கம் தவறிவிட்டது.

முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகர னும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். நோர் வேத் தரப்பினரை வெள்ளைப்புலிகள் என்று ஜே. வி. பி. விமர்சனம் செய்தது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னைய பாதையை அரசாங்கம் கடைபிடித்து வருகின்ற போதும் ஜே.வி.பி மௌனம் சாதிக்கின்றது என்றார். (து)

## ஜெனீவா சென்ற புலிகளின் குழுவினர் எதிர்வரும் சனிக்கிழமை தாயகம் திரும்புவர்

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையின் அமுலாக்கம் குறித்து பேச்சு நடத்துவதற்காக ஜெனீவா சென்ற விடுதலைப் புலி கள் எதிர்வரும் 4ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ளனர்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக வன்னியிலிருந்து சென்ற சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான புலிகளின் குழு பேச்சுவார்த்தையின் பின்னர் நோர்வே மற் றும் ஐஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கும் விஜயம் செய்யத் திட்டமிட்டிருந்தது.

ஆனால், தற்போது தமது பயணத்தைச் சுருக்கிக்கொண்ட அவர்கள், நோர்வே விஜயத்தை முடித்துக்கொண்டு எதிர் வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை தாயகம் திரும்புகின்றனர்.

முன்னர் இவர்கள் எதிர்வரும் 14ஆம் திகதியே தாயகம் திரும்புவதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (து)

## வெளிநாட்டுத் தூதுவர்களை வரவேற்க விசேட வைபவங்கள்

(கொழும்பு)

எதிர்காலத்தில் இலங்கையில் கடமையேற்க வரும் வெளிநாட்டுத் தூதுவர்களை வரவேற்க விசேட உத்தியோக பூர்வ வைபவங்கள் ஏற்பாடு செய்யப்பட இருக்கின்றன.

ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இதற்கான நடவடிக் கைகளை ஜனாதிபதி அலுவலகம் மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு தூதுவர்கள் வகிக்கும் பங்கை அங்கீகரிப்ப தற்கென இத்தகைய சிறப்பு வைபவங்கள் இடம்பெறவிருக் கின்றன. இவ்வாறான முதலாவது வைபவம் இன்று ஜனாதி பதி அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்றைய நிகழ்வில் பலஸ்தீனம், கொரியா, கொலம் பியா, பனாமா ஆகிய நாடுகளின் தூதுவர்கள் ஜனாதிபதி யிடம் இருந்து பதவியேற்புப் பத்திரங்களை பெற்றுக் கொள்ள இருக்கின்றனர். (க-9)

## வேட்பு மனு நிராகரிப்பை எதிர்த்து ம.ம.முன்னணியும் வழக்குத் தாக்கல்!

(கொழும்பு)

தலவாக்கல, லெந்துல, நகரசபைக்குத் தாக்கல் செய்யப் பட்ட வேட்புமனு நிராகரிக்கப்பட்டதற்கெதிராக மலையக மக் கள் முன்னணியும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யவிருக்கிறது.

இந்த நகரசபைக்கு இலங்கை தொழிலாளர் காங்கி ரஸ், மலையக மக்கள் முன்னணி , ஐக்கிய மக்க்ள் சுதந்திரக் கூட்டமைப்பு என்பன இணைந்து போட்டியிடுகின்றன.

இவ்வாறு வேட்புமனு நிராகரிக்கப்பட்டமையானது ஏற்றுக்கொள்ள முடியாத தொன்று என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பி.சந்திரசேக்ரன் தெரிவித்தார். (க-7)

## வீதிகளில் பிரசார வாசகங்கள் எழுதினால் சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் கட்சி கள் வீதிகளில் பிரசார வாசகங்களை எழுதும் செயலுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கையை எடுக்க பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

நேற்று முன்தினம் முதல் இவ்வாறான சட்டவிரோத செய லில் ஈடுபடும் நபர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக் கப்பட்டுவருவதாக பொலிஸாரின் தேர்தல் பணியகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியி டும் எந்தவொரு வேட்பாளருக்கும் பிரதேச ரீதியாக தேர் தல் பிரசாரங்களை நடத்த இடமளிக்க வேண்டாமென பொலிஸ் மா அதிபர் தேர்தல் ஆணையாளரிடம் கோரியுள்ளார். (து-9)

## வித்துடல் விதைப்பு

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்தில் கடந்த 25.2.2006 அன்று ஏற்பட்ட தவறுதலான வெடிவிபத்தின்போது வீரச்சாவை தழுவிக் கொண்ட லெப்.குலச்சுடர் (மாணிக்கம் லோகேஸ் வரன்) என்ற மாவீரனின் வித்துடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் புனிதவிதை குழியில் விதைக் கப்பட்டது.

தமிழீழ மாவீரர் பணிமனை நிர்வாகப் பொறுப்பாளர் பா.இனியவன் தலைமையில் இடம்பெற்ற இறுதி வணக்க நிகழ்வில் மாவீரனின் பெற்றோர் ஈகச் சுடரினை ஏற்றினர்.

வீரவணக்க உரைகளை போர்க்கருவித் தொழிலகப் போராளி கதிரவன், தேனருவி ஆகியோரும் கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பசுபதிப்பிள்ளை யும் ஆற்றினர்.

இந் நிகழ்வில் போர்க்கருவி தொழிலக போராளிகள், தமிழீழ அரசியல்துணைப்பொறுப்பாளர் சோ. தங்கன் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர். (து)

## ரயில் சேவை ஊழியர்கள் இன்று அடையாளப் பணிப்புறக்கணிப்பு

(கொழும்பு)

ரயில் சேவை ஊழியர்களுக்கும், அமைச்சு அதிகாரி கள் மற்றும் ரயில் திணைக்கள முகாமையாளர் ஆகியோருக்கிடையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் உரிய தீர்வு கிடைக்கவில்லையென்று ரயில் சேவை ஊழியர்களின் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ரயில் தொழிற்சங்க நிறைவேற்றுக் குழுவினர் கூடி பணிப்புறக்கணிப்பை மேற்கொள்வதென நேற்று தீர்மானித்தார்கள்.

ஊதியம் தொடர்பான முரண்பாடுகளைத் தீர்க்க அதிகாரிகள் எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில் ரயில் சேவை ஊழியர்கள் இன்று முதல் 48 மணி நேர அடையா ளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ளத்தீர்மானித்துள் ளார்கள். (க-7)

### இலங்கை சீமெந்துக்கூட்டுத்தாபனம் இந்த ஆண்டில்

## 3 இலட்சம் மெற்றிக்தொன் சீமெந்தை உற்பத்திசெய்யும்

(கொழும்பு)

இலங்கை சீமெந்துகூட்டுத்தாபனம் 2005ஆம் ஆண்டில் 10 இலட்சம் ரூபாவை இலபமாக ஈட்டியுள்ளது.

இந்த ஆண்டு மொத்த இலாபத்தை 300 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கும் நோக்கில் தாம் 3 இலட்சம் மெற்றிக் தொன் சீமெந்தை உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத் துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் லலிந்த லியனகே தெரிவித்தார்.

கடந்த ஆண்டு 27 இலட்சத்து 96 ஆயிரம் தொன் சீமெந்தை உற்பத்தி செய்தும் இறக்குமதி செய்துமுள்ளது.

இதேவேளை, புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனத் துக் குச் சொந்தமான 275 ஏக்கர் காணியில் மரமுந்திரிகைசெய் கையை மேற்கொள்வதற்கும் கூட்டுத்தாபனம் திட்டமிட்டுள் ளது.

மூன்றாண்டுத்திட்டத்தின் மூலம் 78 மில்லியன் ரூபா வை சம்பாதிப்பதற்கு தாம் எதிர்பார்த்திருப்பதாக லியனகே தெரிவித்தார்.

மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், இந்த நடவடிக் கையில் ஈடுபடும் சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு தமது ஒத் துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளது. (க-7)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சாவகச்சேரித் தொகுதி ஆதரவாளர்களுக்கான கருத்தரங்கு எதிர்வரும் 4ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இராமலிங்கம் வீதி யில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெறும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றி இதில் கலந் துரையாடப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் தெரிவித்துள்ளார். (க-2)

### தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



கையில் பெருவிரல் தனியே நிற்கிறது மற்ற விரல்கள் சேர்ந்திருக்கிறது. அது போல் பெரிய மனிதன் எப்போதும் ஒதுங்கியே வாழ்வான். சில்லறைகள் எப்பொழுதும் ஒன்றாகச் சேர்ந்து கொள்ளும்.

சுவாமி விவேகானந்தர்

## யாழ்.பல்கலைக்கழக...

தங்குமிட வசதி மற்றும் அவர்கள் எதிர் நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் சம்பந் தமாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், பதிவாளர் உள்ளிட்ட குழுவின ருடன் விரிவான பேச்சு வார்த்தைகளை நடத் தியிருப்பதாகவும் அமைச்சர் விபரித்தார்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தை மீண்டும் ஆரம்பிப்பது சம்பந்தமாக பல்க லைக்கழக மாணவர் அமைப்புக்களுடன் இன்று பேச்சுவார்த்தை நடத்துவதற்கென ஒழுங்குகளை மேற்கொண்டிருப்பதாகவும் இந்தப் பேச்சுவார்த்தையில் எட்டப்படும் இணக்கப்பாட்டையடுத்து மார்ச் மாதம் 6 ஆம் திகதி அளவில் பல்கலைக்கழகம் வழமை போல் இயங்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் யாழ்.பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரி வித்தன.

(ந-2)

## அரசு-புலிகள்...

வரவேற்கத்தக்கது.வன்முறைகள், கொலை கள் ஆகியன தொடர்ந்து இடம்பெறாது என இரு தரப்பினரும் உறுதிவழங் கியுள்ளமையும் யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு அமைய ஆயு தக்குழுக்களின் செயற்பாடுகளை நிறுத்து வதற்கு காணப்பட்டுள்ள இணக்கப்பாடும் சிறுவர் நலன் பற்றி ஆராயப்பட்ட விடயங்க ளும் திருப்தியளிப்பதாகவும் அவ் அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

## கலைப் பீடத்தின் புதிய கட்டடத் தொகுதி

### நாளை திறந்து வைக்கப்படும்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது கட்டடத் தொகுதியின் திறப்பு விழா நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 4 ஆம் திகதி அப்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையால் அடிக்கல் நாட்டப்பட்ட இக் கட்டடத் தொகுதி யை துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோ கனதாஸ் திறந்து வைப்பார்.

நிகழ்வுகள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தலைமையில் இடம் பெறும். (ந)

## ஜெனீவாப் பேச்சுவார்த்தையை...

கல்லிமடுவைச் சோந்த இந்த இளைஞர் வியாபாரத் தொழிலில் ஈடுபட்டு வந்ததா கவும் கடந்த 10 மாதங்களுக்கு முன்னர் வலுக்கட்டாயத்தின் பேரில் கருணா குழுவில் சேர்ந்து கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

பின்னர் கிரான்படைமுகாமில் சிறிலங் காப்படையினருடன் தன்னைச்சேர்த்துக் கொண்டு பொதுமக்கள் மீதான கெடுபிடி நட வடிக்கைகளுக்கு தன்னைப் பயன்படுத்தி வந்ததாகவும் குறிப்பிட்டார்.

கடந்த 18 ஆம் திகதி கிரான் படைமுகா மில் இருந்த தன்னை கருணா கும்பல் தீவுச் சேனைக்கு வருமாறு அழைத்ததாகவும் அங்கு சென்றபோது நீர் விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் ஊடுருவித் தாக்குதல் நடாத்தவேண்டும் எனக்கூறி அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்கள் நிரப்பப் பட்ட ஒரு கலன், சிறிய அலவாங்கு, ஒரு எறி கணை மற்றும் வயர் ஆகியவற்றை தந்தனர்.

அத்துடன் மூன்று நாள் சிறப்புப்பயிற்சி யும் தீவுச்சேனையில் வைத்து வழங்கியுள் ளனர். தாக்குதலை நடத்துவதற்கான ஊக்கு விப்புப்பணமாக 4 ஆயிரம் ரூபா பணமும் கொடுத்ததாக அந்த இளைஞர் குறிப்பிட் டார்.

அதேவேளை புலிபாய்ந்த பாலப் பகுதிக் குச்சென்று தளபதிகளான ஜெயார்த்தனன், உமாறாம் ஆகியோர் மீது தாக்குதலை நடத்தி விட்டு வருமாறும் தாக்குதல் முடிந்த பின் கிரான் படைமுகாமுக்கு வரும்போது ரோச் லைற் பாவிப்பதன் மூலம் படையினர் அடை யாளம் கண்டு கொள்வார்கள் என கிரான் படை முகாமில் உள்ள இராணுவ அதிகாரி கப்டன் பந்துல குறிப்பிட்டதாகவும் இந்த இளைஞர் தெரிவித்தார்.

தாம் செய்யப்போவது தவறு என்பதை உணர்ந்து கொண்டுவந்த வெடிபொருட்க ளுடன் விடுதலைப்புலிகளிடம் சரணடைந் தேன் என்றும் அந்த இளைஞர் தெரிவித் தார்.

(ந-4)

## கணனிப் பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்.மத்திய கல்லூரியில் கணனித் தட் ச்சு (தமிழ், ஆங்கிலம்) மற்றும் எம்எஸ் ஒவ்விஸ் கற்கை நெறிகளை பயில்வதற்காக விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பாடசாலையை விட்டுவிலகிய (வயதெல் லை18-30) இருபாலாரும் கல்லூரியில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர் வரும் 20 திகதிக்கு முன்னதாக ஒப்படைக் குமாறு கல்லூரி அதிபர் எஸ்.பத்மநாதன் கேட்டுள்ளார். (ந)

## உடன்பாடுகளை அமுல்படுத்தாவிடின்...

வாரம் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அரசாங்கம் இணக்கம் தெரிவித்தி ருந்தது.

பொது மக்கள் அதிகமாக வாழும் பிரதே சங்களில் அவர்களுக்கு பாதிப்பினை ஏற் படுத்தும் வகையில் மேற்கொள்ளப்படும் தேடுதல்களை நிறுத்துமாறும் சோதனைச் சாவடிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கை களை மீளாய்வு செய்யுமாறும், மீன்பிடித் தடைகளை அகற்றுமாறும் விடுதலைப்புலி கள் கேட்டுள்ளனர். இவையனைத்தும் 2002 ஆம்ஆண்டு கைச்சாத்திடப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையில் அரசாங்கத்தினால் ஏற் றுக் கொள்ளப்பட்டவையாகும்.

இணங்கியவற்றை அமுல்படுத்த முடியா விடின் மீண்டும் மீண்டும் பேச்சுக்களை மேற் கொள்வதில் அர்த்தமில்லை.

கடந்த வருட இறுதியில் நிலவிய வன்மு றைகளினால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படலாம் என்ற அச்சம் நிலவிய போதிலும் இருதரப் பினரும் ஜெனீவாவில் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு இணங்கியதையடுத்து பதற் றம் தணிந்தது.

2003 ஆம் ஆண்டிற்குப் பின்னர் கடந்த வாரம் இரு தரப்பினருக்கிடையில் நடந்த சந் திப்பினையடுத்து வெளியிடப்பட்ட கூட்டறிக் கையில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் மீண்டும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என இணக்கம் காணப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைக்கு முன்னர் மீண்டும் யுத்தம் வரப்போவதாக நான் நினைத்தேன் ஆனால் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் சமா தானம் மலரும் என்றே எண்ணுகின்றேன். ஆனால் அவர்களுக்குத் தேவை யுத்தமே. நாங்கள் தீயாராகவேயுள்ளோம்.

விடுதலைப்புலிகளிடமிருந்து விலகிச் சென்ற கருணா அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத் தில் இல்லையென அரசாங்கம் தெரிவிக் கின்றது. ஆனால் அவர் அரசாங்கக் கட்டுப் பாட்டுப் பகுதியிலேயே உள்ளார் என்பதற்கு எம்மிடம் ஆதாரம் உள்ளது.

கருணா ஆயுதங்களைக் கீழே வைக்க மறுத்தால் அரசாங்கம் அவரைக்கண்டு பிடித்து அவரின் ஆயுதங்களைக் களைய வேண்டும் என்றும் எழிலன் தெரிவித்தார். (ந-4)

## 20 சிறுவர்கள்...

கும் நிகழ்வு நேற்று முற்பகல் கிளிநொச் சியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் அமைப்பு செயலகத்தில் இடம் பெற்றது.மனித உரிமைகள் அமைப்பின் அதிகாரிகள் முன்னிலையில் 20 சிறார்க ளையும் அனைத்துலக அரச சார்பற்ற நிறு வனங்களின் இணைப்பாளர் தியாகராஜா பெற்றோரிடம் ஒப்படைத்தார். (ந-4)









## யாழ்.படைத்தளபதியுடன்...

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் றோகித பிரிய தர்ஷன தலைமையில் யாழ். மேலதிக அரச அதிபர் எ.சிவசுவாமி மற்றும் பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள், அரசசார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகள், கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினரும் யாழ்.மாவட்டப் படைத்தளபதி மேஜர் ஜென ரல் சந்தன சிறி மற்றும் கடற்படை உயர் அதி காரிகளும் இம் மாநாட்டில் கலந்து கொண் டனர்.

இம் மாநாட்டில் பொது மக்கள் எதிர்நோக் கும் பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப் பட்டன. பாதுகாப்புக் காரணத்தைச் சுட்டிக் காட்டி 790 மீன்பிடி படகுகள் தொழிலில் ஈடு படுவதற்கு படையினரால் அனுமதி மறுக்கப் பட்டுள்ளது.

இதற்கான அனுமதியை உடன் வழங்க வேண்டும் எனவும் தும்பளைக் கிழக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள துறையைத் திறந்து விட வேண்டும் எனவும் பொது அமைப்புக்க ளின் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதற்குப் பதிலளித்த படைத்தளபதி பாதிக் கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கு நிவார ணம் வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் தும்பளைக் கிழக்கு துறையை உடனடியாக திறந்து விடுவதாகவும் கூறினார்.

இதன்போது கடற்றொழிலாளர்களுக்கு அரசினால் நிவாரணம் வழங்கப்பட்டால் அது இரண்டு, மூன்று தினங்களுக்கு மட்டு மே போதுமானதெனவும் எனவே கடற்றொ ழிலாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண் டுமெனவும் வலியுறுத்தப்பட்டது.

- பாதுகாப்புப் படையினர் தங்கியுள்ள பொது மக்களின் வீடுகளுக்கு வாடகை வழங் குதல்.
- சாவகச்சேரி -கச்சாய் வீதியில் வெட் டப்பட்ட வேலிகளை மீளமைத்தல்.
- பொன்னாலைப் பகுதியில் கடற்படை யினர் அமைத்து வரும் முட்கம்பி வேலிகளை அகற்றுதல்.
- தீவகத்தில் கடற்படையினர்பயணிகள் மீது நடத்தும் சோதனைகளை நிறுத்துதல்.
- வரணி இராணுவ முகாமிற்கு முன் பாக மூடப்பட்டுள்ள வீதியைத் திறத்தல்.
- வீதியோரங்களில் கடமையாற்றும் படையினரை மீள அழைத்தல்,

உள்ளிட்ட பல்வேறு விடங்கள் நேற்றைய மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. முன்வைக் கப்பட்ட மேற்படி விடயங்களை பாது காப்புக் காரணங்களுக்காக உடனடியாக அமுல் படு த்த முடியாது எனக் கூறிய யாழ். மாவட்டப் படைத் தளபதி சந்திரசிறி,

பாடசாலைகளுக்கு முன்னால் வீதிப் போக்குவரத்து ஒழுங்குபடுத்தலில் பொலி ஸார் மட்டுமே பணியாற்றுவர் எனவும்,

தீவகத்தில் பயணிகளை சோதனையிடும் நடைமுறையில் அரச உத்தியோகஸ்தர்கள் வாகனத்திலிருந்து இறங்க வேண்டியதில்லை எனவும் அவர்கள் உரிய நேரத்திற்குக் கட மைக்குச் செல்வதற்கான ஒழுங்கு முறைகள் செய்யப்படுமெனவும் தெரிவித்தார்.

படையினர் இருக்கும் வீடுகளுக்கு வாட கை வழங்குவது தொடர்பாக எதிர்வரும் 10 ஆம் திகதி யாழ். அரச அதிபருடன் விசேட சந்திப்பொன்றை படைத்தரப்பு நடத்துவதென வும் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ந-4,5)


## சேவை நலன் பாராட்டு

(01:03:2006)



திருமதி கண்ணகாதேவி உருத்திரசுந்தரம்

[சிரேஷ்ட புகுவிநிலை உத்தியோகஸ்தர்]

[இலிகிதர் சேவை]

Senior Staff Assistant (Clerical Services)

35 வருட பல்கலைக்கழக சேவை

சேவை கால விபரம்

1971–1975 – கொழும்பு பல்கலைக்கழகம் கணிதத் துறை –5 வருடங்கள்

1976–1984 – யாழ்.பல்கலைக்கழகம் நிர்வாகப்பிரிவு–9 வருடங்கள்

1985–2006–யாழ்.பல்கலைக்கழகம் சித்த மருத்துவத்துறை 21 வருடங்கள்

ஓய்வுக்காலங்கள் ஓய்வான காலங்களாக இருக்க எமது வாழ்த்துக்கள்

வாழ்த்துபவர்கள்

தலைவர், விரிவுரையாளர்கள், உத்தியோகஸ்தர்கள்

சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம், கைதடி.

01.03.2006

## இந்து வாலிபர் சங்கம் வட்டுக்கோட்டை

YOUNG MEN HINDU ASSOCIATION VADDUKODDAI

பவள விழா - PLATINUM JUBILEE

(1931-2006)

T.P No :- 0094212223038,0094212223896 E-Mail :- vadduymha 75 @ yahoo.com

### பணிவன்பான வேண்டுகோள்

வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் பவள விழாவை முன்னிட்டு 'பவள விழா மலர்' வெளியிடப்படவுள்ளதால் எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர் கள் பற்றிய விபரங்கள்,வரலாற்று நிகழ்வுகள் அது சம்பந்தமான புகைப்படங் கள் வைத்திருப்பவர்கள் எம்முடன் தொடர்பு கொண்டு 25.05.2006 க்கு முன் னர் தந்துதவுமாறு விநயமாக வேண்டுகின்றோம். உங்கள் ஆக்கங்களும் வர வேற்கப்படுகின்றன.

செயலாளர்;இந்து வாலிபர் சங்கம், வட்டுக்கோட்டை.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 01.03.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.